பக்கங்கள் பத்து
விலை ரூபா 5.00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 17 திங்கட்கிழமை (1-1-2001) தொ. பேசி 3378 ஒலி: 13

பொது சன நூலகம்
01 JAN 2001
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

லாலா சோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
கணபதி களஞ்சியம்
பலாலி வீதி.
உரும்பிராய்.
லாலாசோப் அச்சுவேலி
(கி.1045)

## ★ அரசு - விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தை
# நோர்வே பிரதிநிதி "எரிக்சோல்" வன்னியில் 'பிரபாவை' சந்திப்பார்!

## தைப்பொங்கலை அடுத்து சாத்தியம்

(வவுனியா விசேட நிருபர் ரி. விவேகராசா)

இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வில் அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கு மிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையின் ஏற்பாட்டாளராக செயற்பட்டு வரும் நோர்வே அரசின் விசேட பிரதிநிதி எரிக்சோல் ஹெய்ம் மிக விரைவில் வன்னிக்குச் சென்று தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை சந்திக்கவுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்து செல்வதற்காக முக்கிய மூன்று அம்சங்களுடன் இலங்கை வரவிருக்கும் எரிக்சோல்ஹெய்ம், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும் சந்திக்கவுள்ளார் என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்துள்ளன.

இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்குரிய விடயங்களைதனித் தனியாக நோர்வேயிடம் சமர்ப்பித்துள்ளன.

இந்நிலையில் நோர்வே அரசு இருதரப்பினரது தீர்வு யோசனைகளை உள்ளடக்கியதான தீர்வொன்றைத்தயாரித்துள்ளது.

### நோர்வேயின் தீர்வுப் பொதி

நோர்வே அரசு தயாரித்துள்ள, இத்தீர்வுப்பொதியில் விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளில், ஒன்றான வன்னிப்பகுதிக்கான பொருளாதாரத்தடையை நீக்க வேண்டுமென்பது தொடர்பாக நோர்வே அரசு இலங்கை அரசை வற்புறுத்தப் போதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### தனித்தனியாகவே பேசுவார்

நோர்வேஅரசினால் முன் வைக்கப்படவுள்ள முக்கிய மூன்று அம்சங்களைஉள்ளடக்கிய புதிய தீர்வுதிட்டத்தின்

(10ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக் கழகத்தில் இன்று இரவு எழுச்சிப்போராட்டம்

[சுந்தர்மடம்]

விடுலைப்புலிகளுடன் சமாதானப்பேச்சுக்களை அரசாங்கம் ஆரம்பிக்கவேண்டுமென்ற கோரிக்கை தொடர்பாக அதனைவலியுறுத்தி இன்றுஇரவு எழுச்சிப்போராட்டம் ஒன்று யாழ்பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது இவ் எழுச்சிப்போராட்டத்தை நடத்துவதற்கான தீர்மானம் நேற்றுபல்கலைக் கழக மாணவர்களின்கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

இந்த எழுச்சிப்போராட்டம் கடந்தவெள்ளியன்று பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற போராட்டத்தின் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[வ.37]

## சிப்பாய் - மாணவன் நேருக்கு நேர் கைகலப்பு
### திருநெல்வேலியில் சம்பவம்

திருநெல்வேலிச் சந்தியில் இராணுவ சிப்பாய் ஒருவர் யாழ். பல்கலக்கழக மருத்துவபீடமாணவனின்சைக்கிள் காற்றை திறந்து விட்டதை அடுத்து இருவருக்கு மிடையே கைகலப்பு இடம்பெற்றது.

இதனையடுத்து மேற்படி மாணவனின் அடையாள அட்டை இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்ட போதும் மாணவர் ஒன்றியத்தினால் அவ் அடையாள அட்டை மீளவும் பெற்றுக் கொள்ளப்பட்டது.

(10ம் பக்கம் பார்க்க)

## புட்டபர்த்தியிலிருந்து சத்திய சாயி பாபாவின் புத்தாண்டுச் செய்தி



நீ எங்கு சென்றாலும் உன்கடமையைச்செய் உன்னுள் இருந்து நான் வழிகாட்டிக் கொண்டிருக்கிறேன் என்பதை உணர்ந்து கொள். ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் நான் உன்னுடன் இருக்கிறேன். வர இருக்கும் வருடங்களில் என்னைப் பல வடிவங்களில் உன்னால் உணர முடியும் நீ என்னுடையவன் எனக்கு மிகவும் நெருக்கமானவன் கண் இமைகள் விழியைக் காப்பது போல் நான் உன்னைக் காப்பாற்றுவேன் நான் உன்னை என்றும் விட்டு விலக மாட்டேன் நீயும் விட்டு விலக முடியாது. இந்த நிமிடத்திலிருந்து எதையும் எதிர் பார்த்துச் செயல்ப்படாதே!

மாறாத அன்புடன் உன் கடமையைச் செய்! எல்லாவற்றிலும் இறைவனைக் காணக் கற்றுக் கொள் பொறுமையுடன் இரு சரியான நேரத்தில் உனக்கு எல்லாம் அளிக்கப்படும் மகிழ்ச்சியாய் இரு எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம். எது நடந்தாலும் எதை அனுபவித்தாலும் என் சங்கல்பத்தினாலேயே நடைபெறுகிறது என்பதைப் புரிந்துகொள்! நான் இவ்வுலகத்திற்கு வந்துள்ள அவதார நோக்கத்தை தடுத்து நிறுத்தவோ, தாமதப்படுத்தவோ எந்த சக்தியாலும் முடியாது கண்முன்னே விரிய இருக்கும் பொற்காலத்தில் புனித ஆத்மாவாகிய நீ ஆற்ற வேண்டிய பணிகள் இருக்கின்றன. அதைப் புரிந்து கொள்.

## ஐ. சி. ஆர். சி கப்பல் 5 தடவைகள் இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறைக்கும் திருகோணமலைக்குமிடையிலான சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினால் நடாத்தப்படும்நோயாளர் ப்பல்சேவை இம்மாதம் ஐந்து தடவைகள் நடைபெறவுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்தச்சேவைகள் காங்கேசன்துறையிலிருந்து இம்மாதம் 3,10,17,24,31 ஆகிய திகதிகளில்நடைபெறவிருப்பதுடன் ஒவ்வொரு தடவையிலும் 20 நோயாளிகளும் அவர்களது உதவியாளர்களும் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இக்கப்பலில் வெளிமாவட்டங்களுக்கானதபால் பொதிகளும் கொண்டு செல்லப்படும்

(ந-4)



## வலம்புரியின் புத்தாண்டு வாழ்த்துக்கள்

உதிக்கின்ற புத்தாண்டில் அமைதியும் சமாதானமும் நிலவ இறையருளை வேண்டி,

அன்பர்கள், நண்பர்கள், வர்த்தகப் பெருமக்கள், விளம்பரதாரர்கள், வாசகப் பெருமக்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்,

**வலம்புரிக் குடும்பம்.**

## கினிகிர - 8 படை நடவடிக்கை மூலம் தனங்கிளப்பு கைப்பற்றப்பட்டது
# இராணுவ பேச்சாளர் தெரிவிப்பு!

(கொழும்பு)

கினிகிர-8 இராணுவநடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் தனங்கிளப்பு அரியாலைஆகியபிரதேசங்கள் உட்பட 50கிலோமீற்றர்பரப்பளவுகொண்ட பிரதேசத்தை நேற்றுகைப் பற்றியுள்ளன ரென்றுஇராணுவப் பேச்சாளர் சரத்கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

புதிதாகக்கைப்பற்றிய பிரதேசங்களிலுள்ள பதுங்குகுழிகளில் 206சக்திவாய்ந்த குண்டுகள்மற்றும் 62கண்ணிவெடிகள் உட்படஆயுதங்கள் பல கைப்பற்றப்பட்டதாக சரத்கருணாரட்ண மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தநடவடிக்கை மூலம் யாழ்ப்பாணப் பிரதேசத்தை புலிகள்ஆக்கிரமிக்கலாம்என்ற அச்சம் நீங்கிவிட்டதாகவும்

(10 ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

பண்டத்தரிப்பு, காளையடி பண்ணாகத்தைச் சேர்ந்த வெற்றிவேலு - சின்னத்துரை என்பவருடைய விசேடஅடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கிருசிகேசன் சுவையகத்திற்கு முன்பாக உள்ள பாட்டா சப்பாத்துக்கடை, பருத்தித்துறை எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(2062)

## திருத்தம்

(மல்லாகம்)

சுன்னாகம் தெற்கு மதவடி பாலத்தின் இடிந்த கட்டுக்கள திருத்தம் செய்யப்பட்டுள்ளன. (உ-ப-14)

## பாதீனியம் விஷச் செடி ஒழிப்பு

(சுன்னாகம்)

சுன்னாகம், புன்னாலைக் கட்டுவன் ஈவினை பகுதிகளில் பாதீனிம் விஷச் செடி ஒழிப்பு தீவிரமடைந்துள்ளது.

பாதீனியம் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு இப்பகுதி விவசாய சம்மேளனத்தினரால் பொதுமக்களின் உதவியுடன் இந்த நடவடிக்கை நடை பெற்றுவருகின்றது.

இப்பகுதி மக்களுக்கு பாதீனியச் செடியை அறிமுகப் படுத்தி வைப்பதுடன் அச்செடி மீள முளையாமல் எவ்வாறு அழிப்பது என்பது பற்றியும் சம்மேளத்தினரால் எடுத்துக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது. (க-25)

## 24யானைகள் பலி

(ஏறாவூர்)

அம்பாறைக் காடுகளில் இவ்வாண்டில் இதுவரை 24 யானைகள் இறந்துள்ளதாக வன பரிபாலன திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இறந்தவைகளில் 16 ஆண் யானைகள் எனவும் 5 பெண் இன யானைகள் என்றும் அவர் மேலும் கூறினர். அத்தோடு இறந்த ஏனைய யானைகள் இனங்காணப்படவில்லையென அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

மின்சார அதிர்ச்சி துப்பாக்கி வேட்டு போன்ற தாக்குதல்களிலேயே அதிக யானைகள் பலியாகியுள்ளன. (க)

## மாணவி காயம்

(வவுனியா)

காலில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் பெரியபோமரசன் குளம் கனிஷ்ட வித்தியாலய மாணவிஒருவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

வவுனியா சிதம்பரபுரத்தில் பெற்றோருடன் வசித்துவந்த இவர் கடை ஒன்றிற்கு செல்லும் போதே இத்துப்பாக்கிச் சூடு இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

தனசேகரம் குகனேஸ்வரி (வயது 17) என்பவரே காயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவர். (ச-2)

## சீரற்ற வீதிகள்

(இணுவில்)

உடுவில் மான்ஸ் பாடசாலை வீதி லவ்லேன், இணுவில் மேற்கு செட்டிவீதி மற்றும் சங்குவேலி ஆலடி சமநல சேவைக்கந்தோர் அருகாமை வீதி என்பன நீண்டகாலமாகத் திருத்தப்படாது பள்ளமும் புட்டியுமாகக் காணப்படுகின்றன.

மேற்படி வீதிகளால் பிரயாணம் செய்யும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் தமது பயணத்தினைத் தொடர வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர்.

எனவே உரியவர்கள் மேற்படி வீதிகளைச் சீர் திருத்தி உதவுமாறு அம்மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-49)

## இடம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் புதிய மேல்மாடிக் கட்டடத்தில் இயங்கி வந்த, 6 ஆம் இலக்க தோல் சிகிச்சை விடுதி முன்னர் பிரசவ விடுதி இயங்கிய முதலாம் இலக்க விடுதிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது. (உ)

## ஐ.தே.க செயலர் விஜயம்

[வவுனியா]

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய செயலர் செனத் தம்புக் கொட்டுவ நேற்றுமுன் தினம் வவுனியாவிற்கு விஜயம்மேற் கொண்டார்.

கட்சியின் புனரமைப்பு வேலைகளில் ஈடுபடுவதற்கே இவர் வவுனியா விஜயம் மேற் கொண்டதாக தெரிவிக்கப் படுகிறது. (க-2)

## இராசி பலன்

01/01/2001
(மார்கழி 17, திங்கள்)
சஷ்டி மு ப 10 37 வரை
பூரட்டாதி மு இ 7 04 வரை
ராகுகாலம் 5 02 - 6.32
சுபநேரம் 9.32-11.02

**மேடம்**
பிரயாணம் பணச்செலவு காரிய தாமதம், நிலை மாற்றம்.

**இடபம்**
நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும், மன மகிழ்ச்சி, தனலாபம்.

**மிதுனம்**
தொழில் மேன்மை, முயற்சி வெற்றி, பெரியோர் சந்திப்பு, அதிகாரம்.

**கடகம்**
கட்டுப்படுதல், உடல் உபாதை, பயந்தசுபாவம், பிரயாணம்.

**சிங்கம்**
எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், சிறுவியாதி பிரயாண தாமதம்.

**கன்னி**
போசன சுகம், வாகன வசதி, தனவரவு, கௌரவம்.

**துலாம்**
தனவரவு, சத்துரு ஜெயம். நோய்குணமடைதல் முயற்சி பலிதம்.

**விருச்சிகம்**
வியாதி, சோசமானநிலை தாழ்வுநிலை, காரியதாமதம்.

**தனுசு**
தாய்வழி உறவு, தன்னம்பிக்கைக் குறைவு, பயந்த சுபாவம், முயற்சி தாமதம்.

**மகரம்**
காரியம் கைகூடும், பிரயாணம், அன்னியர் சந்திப்பு, தனவரவு.

**கும்பம்**
தனவிரயம், காரியதாமதம், கௌரவக் குறைவு, வாக்கு கலகம்.

**மீனம்**
உடல்நலம், ஜனவசியம், ஆழ்ந்தசிந்தை, சயனசுகம்.
(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

-வளவன்


வாடிக்கையாளர்கள், நண்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

★ 2001 ஆம் ஆண்டுக்கான மெய்கண்டான் கலண்டர்கள் டயறிகள்
★ பாடசாலை உபகரணப் பொருட்கள்
★ காரியாலயங்களுக்கு தேவையானஅனைத்து உபகரணங்கள்
★ அச்சகத்திற்கு தேவையான பொருட்கள்

இவை அனைத்தையும் ஒருங்கே மலிவாக மொத்த விலைக்கும் சில்லறை விலைக்கும் பெற்றுக்கொள்ள என்றும் நாடவேண்டிய ஸ்தாபனம்.

பேப்பர் ஹவுஸ்

300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(கி/1306)



A/L 2003
(கலை வர்த்தகப் பிரிவுகள்)
ஜனவரி - 06
காலை 8 00 மணி
DMI
யாழ் நகர்
தமிழ் : மீரா
IQ : வழமையான ஆசிரியர்
ஆங்கிலம் : ஜெபக்குமார்
(1997)



ஸ்ரீசெல்வா
(யாழ்ப்பாணம்)
மாதவன் - ஸ்நேகா சார்லி நடித்த
என்னவளே
10-30 மட்டும்
விக்னேஸ், ரவளி நடித்த
நீ எந்தன் வானம்
2-30 மட்டும்
ரசிகர்களுக்கு புதுவருட வாழ்த்துக்கள்
(கி-688)



அனைவருக்கும் எமது இதயம் கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
மக்கள் சேவையில் மகத்தான பத்தாண்டுகள்
யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
உதவும் கரங்கள்

வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மாணவ செல்வங்களின் கல்வி முன்னேற்றம் கருதி ''உதவும் கரங்கள்'' அமைப்பின் கீழ் இலவச பாடசாலை பொருட்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கு விண்ணப்பிப்போர் தாங்கள் படிக்கும் வகுப்பை குறிப்பிட்டு பாடசாலை அதிபர் அல்லது ஆசிரியரின் சிபார்சுடனும் அவரவர் வதிவிடங்களுக்கு அண்மையிலுள்ள எமது சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் பேக்கரி உரிமையாளர் ஒருவரின் சிபார்சுடனும் 10-01-2001 புதன்கிழமைக்கு முன்னர் விண்ணப்பங்களை எமக்கு அனுப்பி வைக்கவும்.

குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தயவு செய்து பாடசாலைகள், கல்வி நிறுவனங்களின் ஊடாக மொத்தமாக விண்ணப்பிக்க வேண்டாம்.

இடம் பெயர்ந்த சகல அங்கத்தவர்களும் ஒவ்வொரு மாதமும் 01-10 திகதிக்குள் தலைமைச் செயலகத்துடன் நேரடியாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நன்றி.

317, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/918)

நிர்வாகம்.
யா. மா. பே. உ. ச.



புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
G. A Q-2001 (யாழ், பேராதனை)
B. A Part I, II. B. A பேராதனை
A/L 2003 கலை, வர்த்தக, கணித
பிரிவுகள்
அனைத்துப்பாட விரிவுரைகளும்
ஆரம்பமாகி விட்டன
அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்
திகழ் கல்வி நிறுவனம்
K. K. S வீதி, இணுவில்.
(கி-960)

## பரமசிவன் பார்வதிக்கோர் பகிரங்கப் பா மடல்

சுந்தரி சவுந்தரி சுமங்கலை சுதந்தரி
சூடாமணி மாலை நீயே!
நந்தினி நாயகி நவயுக வினோதினி
நாதாந்த சக்தி நீயே!
அந்தமில் வேதம் நீ அனைத்துலக நாயகி
ஆதிபராசக்தி நீயே!
பத்மினி பவானி பங்கய வல்லிநீ
பாராளும் அன்னை நீயே!

உன்னைத் தமிழர் யாம் உளமார வேண்டியே
ஊன் உருகப் பாடிநின்றோம்
கண்ணதுவும் குளமாகக் கண்ணகி உனைவேண்டிக்
கசிந்துருகித் தமிழர் எல்லாம்
பொன்னல்ல- பொருளல்ல- பூதலத்து வேறல்ல
'போர் நிறுத்தம்' ஒன்றே கேட்டோம்
அன்னையுன் செவிதனக்கு அது எட்டவில்லையோ?
அழிவினியும் உறுதியாச்சோ?

வந்தனை செய்துனை வாயாரப் போற்றி நிதம்
வாழ்த்துவோர் தமிழர் இலையோ?
நிந்தனை செய்தனம் என்றிடின்-எம்மிடம்
நீ அதை உரைக்கவில்லையே!
சந்ததமும் கண்கலங்கிச் சாற்றிடும் மொழியெலாட
சந்தமிகு தமிழுமிலையோ?
வந்துனை நிதம் பணிந்து வாயாரப் பாடியும்
வாளா திருத்தல் முறையோ?

அப்பனாம் சிவனார்க்கு அழுதழுது பல மடல்கள்
அனுப்பினோம் கிடைக்கவிலையோ?
தப்பாது உதவிடும் தனயனாம் கணபதிக்கு!
தந்த எம் மகஜர் எங்கே?
ஒப்பரிய வேலேந்தும் ஒளிதவழ் முருகவேளின்
ஓராறு முகங்கள் எங்கே?
செப்பரிய தமிழ் கூறும் தெய்வங்கள் எங்கெங்கே?
தேடியலைகின்றோம் நாமே!

அப்பனொடு அம்மையும் அருள் வீரபத்திரரும்
அருள்ஞான வைரவருந்தான்
இப்பாரில் எழுந்தருளி 'இல்லையினி ஈழத்தில்
இன்னல்கள்' எதுவுமெனவே
தப்பாது சாற்றிடுதல் தான் தகைமை-என்று கற்ற
சான்றோர்கள் கூறுவதனால்
இப்பாடல் தனை எழுதி ஈழ இலச்சினையுடன்
இப்போதே அனுப்பிவைப்பேன்
ஒப்பரிய தமிழ் காக்கும் ஒண்பெரிய வலம்புரியே!
ஒரு பிரதிதந்தேன் உனக்கு

அன்புடன்
**மு. திருநாவுக்கரசு**
(ஓய்வுபெற்ற நீதிபதி)

## புத்தாண்டே புதுமைபடை

புவியினமது மக்கள் - வாழ்வில்
புதுயுகம் காட்டிட
புதியதோர் உலகை நோக்கி
புதுநடை போட்டிட ......
– புத்தாண்டே வா வா —
பட்ட துயர் நீங்கிட
பரிதவிக்கும் நிலை மாறிட
பக்குவமாய் நாம் வாழ
பரிந்துனை வாழ்த்த ......
— புத்தாண்டே வா வா —
போர் முழங்கிக் கொட்டுகின்ற
போராட்ட காலத்திலே
போனவருடம் பட்ட துயர்
போதும் என்றாகி விட்டது ...
— புத்தாண்டே வா வா —
நீதியிலும் நேர்மையிலும்
நிறைவாக செழுமை கண்டு
நிம்மதியாக நாம் வாழ
நிலையான சமாதானத்தை
புத்தாண்டே கொண்டு வா

**நாகமணி - மகேந்திரலிங்கம்**

## புத்தாண்டே வருக! வருக!!

புத்தாண்டு தனிலிந்த நாட்டிலே அமைதிமலர்
பூத்தே என்றும்
நித்த நித்தம் சிங்களவர் தமிழரென்ற பேதமின்றி
நிதமும் ஒன்றாய்
தத்தமது உரிமைதான் பெற்றிடுநல் சமாதானம்
நிலவ வேண்டும்
அத்தகைய நிலைவந்து நாம்மகிழப் புத்தாண்டே
அளிப்பாய் இன்றே
தொன்றுதொட்டு பேர்பெற்ற ஈழவளநா டின்
றம்மா உலகம் தன்னில்
என்றுமில்லா வகையின்னல் அடைவதனை அரசாள்
வார் ஒருக்கால் எண்ணார்
அன்றந்த அன்னியரால் அடையாத பெருந்துயரம்
படுகொலைகள் பொருட்கள் சேதம்
இன்றுவரின் சுதந்திரம் தான் பெற்றென்ன பெறா
தென்ன யாவு மொன்றே
எத்தகைய இனத்திற்கும் குடியுரிமை முதலான
சுயாதீன மென்றும்
நித்தியமாய் அடைந்தில்லா நாடதுதான் சுடு
காடாய் மாறும் என்கை
சித்தமதில் உணர்ந்தறியா ஆட்சியினர் மடமையால்
அந்த நாடு
சத்தியமாய் நாசமுறும் என்றவுண்மை அறிவிக்க
வாராய் ஆண்டே

**நா. தர்மராசா - கொடிகாமம்**

# மிருசுவில் படுகொலைச் சம்பவம்

# மனிதாபிமானம் அற்ற ஒன்று

## இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கம்

(யாழ்ப்பாணம்)

''மிருசுவில் வடக்கில் எட்டுப் பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவமானது மனித நேயமற்றதும், மனிதாபிமான மற்றதும், அடிப்படை மனித உரிமைகள் மீறும் செயலுமாகும்.

இவ்வாறு கடந்த 19 ஆம் திகதி மிருசுவில் வடக்கு படித்த மகளிர் திட்டப் பகுதியில் இடம்பெற்ற படுகொலை சம்பவம் தொடர்பாக தென்மராட்சியிலிருந்துஇடம்பெயர்ந்தோர் நலன்புரி அமைப்பினர் வெளியிட்ட கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக் கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இப் படுபாதகச் 'செயலைப் புரிந்தவர்கள் நீதி விசாரணைக்குட்படுத்தப்பட்டு நீதிதேவன் முன் நிறுத்தப்படல் வேண்டும்.

இனிவரும் காலங்களிலேனும் இவ்வாறான அநாகரிகமான படுகொலைச் சம்பவங்கள் நடைபெறாது நொந்து போயுள்ள தமிழ் மக்களைக் காப்பாற்றுவது சம்பந்தப்பட்ட அனைவரினதும் தலையாய கடமையாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை படுகொலை செய்யப்பட்ட குடும்பங்களின் மரணச் சடங்குச் செலவாக தலா 50 ஆயிரமும், நஷ்டஈடாக தலா 2 லட்சம் ரூபாவும் வழங்க நடவடிக்கை மேற்கொண்ட அமைச்சர் கே.என்.டக்ளஸ்தேவானந்தா பாராளுமன்றஉறுப்பினர்கே.வி.குகேந்திரன் ஆகியோருக்கு மேற்படி அமைப்பின்சார்பாக நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துள்ளனர்.

(உ-05)

### கூரை ஏறி

## பந்து எடுக்க முயன்றவர் வீழ்ந்து படுகாயமுற்றார்

(யாழ்ப்பாணம்)

பந்து எடுக்க கூரை ஏறியவர் தவறி கீழே வீழ்ந்து படுகாயமடைந்த பரிதாபச் சம்பவம் அண்மையில் குருநகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அசோக் கியேல் ஜெயக்குமார் (வயது 40)என்றகுடும்பஸ்தரே இவ்வாறு கூரையில் இருந்து வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

குழந்தைகள் பந்து விளையாடிக் கொண்டிருந்த வேளை, அது கூரையின் மேல் சிக்கி விட்டதாகவும் அதனை எடுக்க முயன்ற போதே இவ் விபரீதம் நிகழ்ந்ததாகவும் தெரியவந்துள்ளது.

(உ 12)

### அந்தோனியார்

## ஆலயத்தில்

(சுண்டுக்குளி)

கடந்த மே மாதத்தின் பின்னர் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று காலை 8.00மணிக்கு புத்தாண்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

யாழ். ஆயரின் அனுமதியுடன் பாசையூர் புனித அந்தோனியார் ஆலய நிர்வாக சபை செயலாளர் கிளிபொட் அன்ரனிப்பிள்ளை படையினருடன் தொடர்பு கொண்டதையடுத்து திங்கள் காலை 8 மணிக்கும் செவ்வாய் மாலை 3 மணிக்கும் திருப்பலி ஒப்புக்கொடுக்க படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

(ந-110)

### இலங்கையின்

## இந்து குருமார் ஒன்றியம் உலக அரங்கில்வியாபகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு செயற்படும், இலங்கை இந்து மத குருமார் ஒன்றியம், நேற்று முதல் சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் என்ற பெயருடன் செயற்பட்டுவருகிறது.

இந்துமத குருமார் ஒன்றிய பிரதிநிதிகள் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து, மேற்படி பெயர் மாற்றம் தொடர்பாக முடிவு செய்துள்ளனர்.

இச்சந்திப்பின் போது குருமாருக்கு சகலவசதிகளுடன் கூடிய கட்டிடம் ஒன்று அமைப்பதற்கு நல்லூர்ப் பகுதியில் காணி ஒதுக்குவதாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணி பல்லவராஜன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்துக்கள் குருகுல கல்விகற்கவசதிகளுக்கு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென்று உறுதியளிக்கப்பட்டது.

இக் குருமாருடனான சந்திப்பின் போது வலிமேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதனும் கலந்து கொண்டார்.

(இ)

## கடைகளில் திருட்டு

(சங்கானை)

அளவெட்டி தெற்குப்பகுதியில் அண்மையில் ஒரேநேரத்தில் இரண்டு கடைகள் உடைத்து பெறுமதி மிக்க பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

அடை மழையும் காற்றும் ஒருங்கே காணப்பட்ட நள்ளிரவு வேளையில் இத் திருட்டு இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி கடைகளில் காணப்பட்ட பால்மாவகைகள்மெறுமதிமிக்கபொருட்கள் மற்றும் பணம் என்பனவே களவாடப்பட்டுள்ளதாய் தெரியவந்துள்ளது.

குமார் கடை ,விஜயன் கடை ஆகியவற்றிலேயே திருட்டு இடம்பெற்றிருப்பதாய் தெரியவந்துள்ளது.

(உ- -16)

## கொல்களத்தில்வெட்டப்படும் ஆடுமாடுகளுக்கு அறவிடும் தொகையில் மாற்றமில்லை

(யாழ்ப்பாணம்)

கொல்களத்தில் ஆடுகள், மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதற்கு யாழ். மாநகரசபையால் அறவிடப்பட்டுவந்த தொகை உயர்த்தும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி செயற்பாட்டிற்கென முன்னர் 25 ரூபா அறவிடப்பட்டு வந்த போதிலும் திடீரென இத்தொகை 100 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது.

இது குறித்தும் இதனால் வியாபாரிகள் மற்றும் நுகர்வோர் அடையும பாதகபலன்கள் குறித்தும் மாநகரசபை உறுப்பினர்கள் சார்பாக புளொட் அமைப்பினர் யாழ். மாநகரசபை ஆணையாளர் ஆகியோருக்கு கடிதமூலம் விளக்கியதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டுளது.

இதேசமயம் மேற்படி விடயம் குறித்து அடுத்த மாநகர சபை பொதுக்கூட்டத்தின் போது ஆலோசிக்கப்படவுள்ளது.

(உ)

### வடக்கு-கிழக்கில்

# ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்கள் விரைவில் நிரப்ப நடவடிக்கை

## ஆங். டிப்ளோமா கற்றோருக்கு முன்னுரிமை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வெற்றிடமாக இருக்கும் ஆங்கில ஆசிரியர் பதவிகள் நிரப்பப்பட விருப்பதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொக்குவில், வவுனியா மற்றும் திருகோணமலைப் பகுதிகளிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஆங்கில டிப்ளோமா கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களே இந்த வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படவுள்ளதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 500 இற்கும் அதிகமான ஆங்கில ஆசிரியர் பதவி வெற்றிடங்கள் இருக்கின்றன.

அதேவேளை தற்போது ஒப்பந்த அடிப்படையில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக நியமிக்கப் பட்டுள்ளவர்களில் புதிதாக ஆங்கில ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் போது, தகுதி அடிப்படையில் சேவையாற்றுகின்ற ஆங்கிலத் தொண்டர் ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று கல்வி அமைச்சர் உறுதியளித்துள்ளதாக இலங்கை தமிழர்ஆசிரியர்சங்கம்மேலும் தெரிவித்துள்ளது.

(க-ச)

# புத்தாண்டு சிறப்புமலர் - 2001

## யாழ். ஆயரின் புத்தாண்டு தினச் செய்தி



புதிய மிலேனியத்தில் இறையருள் வேண்டி நீண்டகாலப் போரின் அனர்த்தங்களினால் அல்லற்பட்டு அமைதி மிக விரைவில் வரும் என்ற நம்பிக்கையுடன் இப் புதிய ஆண்டை நாம் ஆரம்பிக்கின்றோம்.

போரினால் அல்ல, பேச்சுவார்த்தை புரிந்துணர்வு, விட்டுக் கொடுத்தல் ஏற்றுக்கொள்ளுதல் பரஸ்பர நம்பிக்கை என்பவற்றை தோற்றுவிப்பதனால் மட்டுமே நாம் எதிர்பார்க்கும் இந்த அமைதி எமக்கு கிடைக்கும்

அரச தரப்பினர், அமைதிக்காய் ஏற்பட்டிருக்கும் இந்த அரிய வாய்ப்பை நழுவ விடாமல் போரினை நிறுத்தி, இடம் பெயர்ந்து துன்புறும் மக்கள் மத்தியில் சுமுகநிலையைத் தோற்றுவித்து, அமைதிக்கான பேச்சுவார்த்தையின் அடுத்த கட்ட நடவடிக்கையினை தீவிரமாக ஆரம்பிக்க வேண்டுமென்று இரக்கமாக வேண்டுகின்றோம். யுத்தத்தை அல்ல, சமாதானத்தையும் சமாதான செயற்பாடுகளையுமே முன்னெடுப்போம் என்ற உறுதி மொழியை அரசு ஏகோபித்த குரலில் வெளியிட வேண்டும். அதனையே செயல்படுத்த வேண்டும்.

இவ்விதமே மக்கள் மேல் இன்னும் சுமைகளை சுமத்தாமல் தாங்களாக முன்வந்து அறிவித்திருக்கும் இந்த யுத்த நிறுத்தத்தை தொடருமாறும் அமைதிக்கான பேச்சுவார்த்தைக்கு தமது முழு ஒத்துழைப்பை வழங்குமாறும் விடுதலைப் புலிகளையும் வேண்டுகின்றோம்.

அமைதிக்கான இவ்அரிய சந்தர்ப்பத்தை எதிர்க்கட்சியினரும் தங்களது கட்சி நலன்களைப் பின்வைத்து அமைதிக்கான முயற்சிகளுக்கு எவ்வித குந்தகமும் விளைவிக்காமல் செயற்படுமாறு வேண்டுகின்றோம்.

இத்தருணத்திலே, தமது சுய நலன்களையும் கட்சி நலன்களையும் கருதாமல் எமது இனத்தின் விடுதலைக்கான முயற்சிகளை பின்னடிக்காமல் பொது நலன் கருதும் பெருந்தகைகளாக செயற்படும் படி ஏனையதமிழ்க் கட்சிகளையும் மற்றும் சம்பந்தப்பட்டவர்களையும் வேண்டுகின்றோம்.

நான்கு பழம்பெரும் உலக மதங்களும் எம் நாட்டில் இருப்பது எமது சிறபபம்சமாகும். எமது நாட்டிலுள்ள இந்த மதங்களின் சிறப்பான பணி இலங்கை நாட்டில் ஒற்றுமையும் சமாதானத்தையும் கட்டியெழுப்புவதாகவே இருக்க வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டமாக எமது நாட்டில் சில பெரும்பான்மை மதவாதிகள் மொழி இனவாரியாக ஆதிக்கத்தைச்செலுத்தி சமூகங்களிடையே பிளவையும் ஒற்றுமையின்மையையும் கொண்டுவர முயற்சிக்கின்றன. இவர்களும் அமைதிக்கான இவ்வருடத்தில் இலங்கையில் வாழும் இனங்கள் மத்தியில் ஒற்றுமைக்காக தீவிரமாக உழைக்கவேண்டுமென அன்பு அழைப்பு விடுக்கின்றோம்.

இவ் இனிய புத்தாண்டிலே எமது மக்கள் போர் நீங்கி, நீதியோடு கூடிய அமைதிக்கான பாதை திறக்கவும் மக்கள் எல்லோரும் தொல்லை நீங்கி இன்புற்றுவாழவும் மனநிறைவோடு வாழ்த்துகின்றோம்.

**தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை**
(யாழ். ஆயர்)

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

### 2001ல் ஏற்றிடு புத்தாண்டே

புன்னகை விழித்திட
பூத்திடு புத்தாண்டே
மண்ணினைக் காத்திட
மலர்ந்திடு புத்தாண்டே

உழைப்பினை வியர்வையை
உயர்த்திடு புத்தாண்டே
உரிமையை விடுதலையை
உணர்ந்திடு புத்தாண்டே

களப்பினை இலஞ்சத்தை
களைந்திடு புத்தாண்டே
கணனியைக் கல்வியை
நிமிர்த்திடு புத்தாண்டே

மழையைத் தென்றலை
வரவிடு புத்தாண்டே
அழிவைப் புயலை
அகற்றிடு புத்தாண்டே

**நல்லை அமிழ்தன்**

### உரிமைகள் வேண்டும்

ஆளுமை நிறைந்த
வாழ்வு வேண்டும்
ஆண்மை நிறைந்த
வெற்றி வேண்டும்.

நெஞ்சில் நிறைந்த
உறுதி வேண்டும்
நினைவில் மலரும்
திறமை வேண்டும்.

பஞ்சம் அகன்றிடப்
பாடுபடல் வேண்டும்
அஞ்சும் வாழ்வை
அகற்றிடல் வேண்டும்.

எங்கும் வாழ்ந்திட
உரிமைகள் வேண்டும்
எல்லோரும் வாழ்ந்திட
உரிமைகள் வேண்டும்.

வெற்றிகள் கரங்களில்
குவிய வேண்டும்
சத்தியம் வாழ்வு
சரிதம் எழுதிடல்
வேண்டும்

**புலேந்தி திலீப்காந்த்**
(பொறியியல்பீடம்,
மொறட்டுவ பல்கலைக்)
கழகம்.

## நல்லை ஆதீன முதல்வர் வழங்கிய புதுவருட ஆசிச் செய்தி



அன்பு நேயச்செல்வர்காள்! மலருகின்ற புதுவருடம் நமக்கெல்லாம் நிம்மதியைத் தருகின்ற ஆண்டாக அமைய நாம் எல்லோரும் சேர்ந்து இறையருளை வேண்டி நிற்பது காலத்தின் தேவையாகும். இடம் பெயர்வுகள், இன்னல்கள் என்று தமிழினம் படுகின்ற தாங்க முடியாத சோதனைகள் கடந்த ஆண்டுகளில் நீண்டு சென்றுள்ளது. இதனால் வேதனையும், விரக்தியுமே மிஞ்சியுள்ளதை நாம் மறந்து விட முடியாது.

இந் நிலையில் போர் ஓய்ந்து நாட்டில் அமைதியும், சமாதானமும், சுபீட்சமும் நிலவ புலருகின்ற புதுவருடத்தில் எல்லேரும் ஒன்று சேர்ந்து இறையருளை வேண்டுவோம்.

இறைவனின் பெருங் கருணையே நமது துன்பங்களுக்கெல்லாம் தீர்வு காண வல்லது, இதற்கு அமைவாக மலருகின்ற 2001 ம் ஆண்டில் ஒற்றுமை, நீதி தர்மம் நிலைத்து அமைதி கிடைக்க.

ஆசி கூறுகின்றோம்.
''என்றும் வேண்டும்
இன்ப அன்பு.''

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
2 வது குருமஹா சந்நிதானம்.

நல்லை ஆதீனம்,
நல்லூரர்.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
சகலவிதமான மணிக்கூடுகளும் சிறந்த முறையில் திருத்தம் செய்துகொள்ள
**சிவாஸ் மணிக்கூட்டு தொழிலகம்**
இல. 26, முனீஸ்வரன் வீதி,
(ஹற்றன் நஷனல் வங்கி அருகாமை)
யாழ்ப்பாணம்.
(கி/915)

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த புத்தாண்டு நல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.
**நாகராஜேஸ்வரி மோட்டோர்ஸ்**
797, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
சகலவிதமான வாகனங்களும் குறித்த தவணையில் சிறந்த முறையில் திருந்திக் கொள்ள யாழ். நகரில் 35 வருட அனுபவம் வாய்ந்த ஒரே ஸ்தாபனம்.

அன்பார்ந்த வாடிக்கையாளர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக
★ பாடசாலை உபகரணங்கள் ★ பத்திரிகைகள் ★ மற்றும் அனைத்து வகையான புத்தகங்களுக்கும்
யாழ் நகரில் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
ஆஸ்பத்திரி வீதி, (கி/1305) யாழ்ப்பாணம்.

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# புத்தாண்டு சிறப்பு மலர்-2001

## வேதனைகள்; சோதனைகள் வாழ்வின் தடைகளல்ல

# இறை அருளும்; ஆன்மீக தேடலுமே நித்தியத்திற்கு வழி

புதியதோர் நூற்றாண்டு இன்று பிறந்துள்ளது. எல்லோர் மனங்களும் புதிய எண்ணங்கள், செயல்கள், திட்டங்கள் என 21 ஆம் நூற்றாண்டை எதிர்கொள்ள ஆவலுறுகின்றன. நாட்டுக்கும் சமூகத்துக்கும், தனி மனித வளர்ச்சிக்கும் ஏற்றது உயர்வான சிந்தனைகளேயாம்.

இன்றைய காலத்தில் நாமும் வாழ்ந்தோமே, வாழ்கின்றோமே என எண்ணிக் கொள்வதல்ல. எப்படி வாழ்கின்றோம், வாழ்ந்தோம் என வரலாற்றுப் பதிவுகளை எமது வாழ்வில் பதித்து விட நாம் என்ன செய்யலாம் என்பதனை திட்டமிட்டு செயற்படவும் நின்று நிதானித்து 3 வது மிலேனிய வாழ்வை தொடங்கிடவும் அழைக்கப்படும் இப்புனித நாளை எப்படி மகிழ்வோடு எதிர்கொள்வோம் என்பதேயாகும்.

''வளமுடன் இருக்கும் பாவிகளைப் போல நீயும் இருக்க வேண்டுமென்று ஏங்காதே! ஆண்டவரிடம் எப்போதும் அச்சமுள்ளவனாயிரு. அப்பொழுது உன்வருங்காலம் வளமனதாய்இருக்கும் உன் நம்பிக்கையும் வீண் போகாது'' என நீதி மொழி 23:14 விளக்கம் தருகிறது

### இரட்டிப்பு மகிழ்ச்சி

படைப்பின் முதல்வனான இறைவனை வழிபட எந்த மதத்தினரும் புதிய நாளை புதிய செயலை தொடங்கும் போது ஆவலுறுவது போல் நாமும் அந்தஇறைவார்த்தையின் பொருள் உணர்ந்து ஆன்மீக பலத்தை ஆழப்படுத்தி வாழ்வால் வெளிப்படுத்துவதில் தான்மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது. மகிழ்ச்சி மற்றவனை சுரண்டி வாழ்வதிலும், பொய், களவு, ஏமாற்றுக்களிலும் வாழ்வோரின் வாழ்வை கண்டு ஏங்கி, அவற்றுக்கு அடிமையாகி விடாது. நம்பிக்கையுடன் சுயமுயற்சியுடன் வாழ வழி காட்டும் நீதி மொழிகள் எம் வாழ்வில் அர்த்த மூட்ட வேண்டும்.

### மமதை வேண்டாம்

எம்மை நாம் வழிப்படுத்துவதில் எமது ஆன்மீக பண்புகளை வெளிப்படுத்தி முன் மாதிரியாக வாழ முனைவதன் மூலம் தான் இகத்தில் மகிழ்ச்சியை காணலாம். இறையருள் ஆசீர் பெற்றவர் என்ற மமதையும் எமக்கு பெரும் இடர்களே இன்று சபைகள், குழுக்கள், குடும்பங்கள், மதங்கள் மட்டில் மமதை தலை தூக்கியதால் ஒருவருக்கொருவர் மதம் என்ற போர்வையில், மனம் கொண்ட மதம், மதம் கொண்டதால் மனித மகத்துவத்தை இழந்து மமதைச் செயற்பாட்டை மனதிற் கொண்டு வெளிப்படுத்துகிறார்கள்.இதனை இன்றைய உலகம் எள்ளி நகையாடும் போது மதத்தின் புனிதமும், மனிதத்தின் மாண்பும் சுய நலத்தினால் வெட்கித் தலை குனிகின்றது.

### நிறைவான மகிழ்வு

இன்றைய புதிய மிலேனிய உலகில் கால் பதிக்கும் நாட்களில் நாகரிக மோகமும் ஆன்மீகத்துக்கு பலசோதனைகளையும், சவால்களையும் தருவதை நடைமுறையில் காணும்போது, கலக்கமுறாது நம்பிக்கை வாழ்வுக்குள் எம்வாழ்வை வழிப்படுத்தி முன்மாதிரிகளாக வாழ்வதில் தான் புதிய சமுதாயம் நிறைவான மகிழ்வை அனுபவிக்கமுடியும்

'நிறைவுள்ள காலத்தில் உன் மனம் சோர்வடையுமானால், குறைவுள்ள காலத்திலே உன் ஆற்றல் இன்னும் குன்றிப்போகும் அன்றோ' நீதிமொழி-24

### புதுவாழ்வு

முட்பற்றைக்குள் வீழ்ந்தவன் ஒருவன் அதில் இருந்து மீள முடியாமல் அதனை இறுக பற்றிக்கொண்டு, ஆண்டவரே! இதில் இருந்து என்னை விடுவித்துக்கொள், என கூக்குரலிட்டால் ஆண்டவர் மீட்பார் என எதிர் பார்க்க முடியுமா? இது போலவே உன் தவறான வாழ்விலிருந்து தான சு முயன்று விடுபட முனையாது ஆண்டவரை மட்டும் குறை கூறிக் கொள்வதில் என்ன பயன்? குடிபோதை, தீயநாட்டம், சுரண்டல், களவு, பொய், ஏமாற்று என சொந்த வாழ்வாய் இருந்தால், அவற்றில் இருந்து விடுபட்டு புதுவாழ்வு தேடி மகிழ்வாக வாழ்வதில் தான் உமக்கும், உங்கள் சபைக்கும் உங்கள் குடும்பத்துக்கும், சுற்றத்துக்கும் விழிப்புணர்வு ஊட்டி வழிகாட்டி வாழமுடியும்.

மாற்றம் காணும் மூன்றாம் மிலேனியத்தில் புது வாழ்வாக மகிழ்ச்சியூட்டும் வார்த்தைகளில் மட்டுமல்ல, வாழ்க்கையாலும் வாழ்ந்துகாட்டுவதால் ஆன்மீக வெளிப்பாட்டின் அர்த்தத்தை வெளிப்படுத்தும் மதத்தின் புனிதமும், மனித நேயமும் மனித உறவுக்கு வலுவூட்டும்அல்லவா?

மிலேனியப் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.

**யோசப் பாலா**

அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக

**SUBRA (14) கல்வி நிறுவனம்**
**சித்தன்கேணி**

**2003 A/L கலை வர்த்தக கணித விஞ்ஞான பிரிவு ஆரம்பம்**
**05 - 01 - 2001 காலை 7. 30**

கலை வர்த்தகம்

சணக்கீடு D. SAM
வணிகக்கல்வி நந்தீஸ்
தமிழ் நாக. தமிழ்ந்திரன்
புவியியல் ஐங்கரன்
கிறிஸ்தவம் அஜந்தா
பொதுவினா தவசேகர்
பொருளியல் ஜெயக்குமார்
அளவையியல் E S. பவன்
இந்துநாகரிகம் ஸ்ரீஸ்
நாடகமும் அரங்கியலும் A. C பிரான்சிஸ்
ஆங்கிலம் விஜயபாஸ்கர்

**கணித விஞ்ஞான பிரிவு**

பௌதிகவியல் ஜெயம்
இணைந்த கணிதம் பிரதீபன்
இரசாயனவியல் அன்பு
உயிரியல் தயாபரன், கஜன்

★ வலிமேற்கில் தன்னிகரில்லா தனி நிறுவனம்
★ கடந்த கால மாணவரின் பெறுபேறே எமது தனித்துவம்
★ அனுமதிக்கு முந்துங்கள் - இம் முறை ஒரு பிரிவு மட்டுமே

- நிர்வாகி

(கி/911)

புத்தாண்டு வாழ்த்துக்கள்
சிவா ரெக்ஸ்ரைல்ஸ்

நங்கையர் விரும்பும் நவநாகரிகமான
→ பிடவைத் தினுசுகள்
→ கூறைச்சேலை வகைகள்
→ பஞ்சாபி, ஸ்சேட் அன் பிளவுஸ்
→ சேட்டிங், சூட்டிங் அனைத்தையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

**சிவா ரெக்ஸ்ரைல்ஸ்**

இல: 27,
பெரியகடை,
யாழ்ப்பாணம்.

கிளை-
பிரதான வீதி
சித்தன்கேணி.

(கி/913)

**வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்**
**எமது புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்**

இரண்டாவது ஆண்டில் கால் பதிக்கும் வலம்புரிக்கும் நல்வாழ்த்துக்கள்

வடமாகாணத்தில் 60 வருட றைக்கிளீன் சேவையுடன் முன்னோடியான எமது ஸ்தாபனம கடந்த 25 வருட காலமாக
★ போட்டோ ஸ்ரற் பிரதி செய்தல் ★ அடையாள அட்டை கவரிடுதல் ★ மிகப்பெரியளவிலான வரைபடங்கள்
★ புத்தகங்கள் முன் மட்டை கவறிங் யாவும் கவரிட்டு பெற்றுக்கொள்ளலாம்

குறிப்பு:
அச்சக உரிமையாளர்களுக்கு புத்தகம் முன்மட்டைகளுக்கு கவரிடுதலுக்கு விசேட சலுகை வழங்கப்படும்.

**★ சன்லைற் றைக்கிளீன் ★**

**பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.**

கிளைகள்: **சன்லைற் மல்ரி சேவிஸ் -- சன்லைற் கொமினிக்கேசன்**
**T. P 2741**

(கி/916)

## வருக புத்தாண்டே

அன்பு வளர்ந்திட
ஆனந்தம் மலர்ந்திட
வருக புத்தாண்டே !

இன்பம் பெருகிட
ஈகை சிறந்திட
வருக புத்தாண்டே !

எல்லோரும் வாழ்ந்திட
ஏழைகள் மகிழ்ந்திட
வருக புத்தாண்டே !

ஐயங்கள் நீங்கிட
ஒற்றுமை ஓங்கிட
வருக புத்தாண்டே !

மீசாலையூர் – தம்பியண்ணா

## பொது அமைப்புகள் கோரிக்கை

சாவகச்சேரி நகர் வாழ் மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று வீடுகளைப் பார்வையிட்டு பொருட்களை மீட்டு வர உதவுமாறு பொது அமைப்புகள் பலவும் தென்மராட்சி இராணுவ சிவில் நிர்வாக அலுவலர்களை அனுமதி கோரியுள்ளன.

சாவகச்சேரி பழனியாண்டான் ஆலய பரிபாலன சபை, சாவகச்சேரி மாதர் அபிவிருத்திச் சங்கம், சாவகச்சேரி சத்திய சாயிபாபா வழிபாட்டு நிலையம், சாவகச்சேரி சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் ஆகியனவே ஒன்றிணைந்து மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளன. (உ-41)

## விடியல் வருமா எங்களுக்கு?

புதிய ஆண்டு பிறக்கிறது
புதிர்களாகுது எம் வாழ்வு
விதியை மாற்ற யார் வருவார்
விடியல் வருமா எங்களுக்கு
நதிகள் போல வளைந்து நெளிந்து
நாங்கள் ஓடோடுகின்றோம்
சதிகள் செய்யும் போரும்
சரிந்து இங்கு போகாதோ
மதியாது கொண்டே தலைமைகள்
மனிதமதை யினிப் பேணிடுமோ
ஐதியது கொண்டு எம்வாழ்வு
ஜெயித்துடுமோ இப்புவியில்?

- புதுமை -
(யாழ்ப்பாணம்)

## "புதுவாழ்வு எந்தமக்கு வேண்டுமப்பா"

எப்பவோ முடிந்த காரியம் என்று
எங்கள் குரு நாதனே சொல்லிவைத்த
முக்கால வார்த்தைக்கு இவ்வருடப் பிறப்பு
முத்திரையாய்ப் பிறக்க வேண்டுமப்பா.

இது காலம் நாமுற்ற துன்பங்கள் யாவுமே
இனிமேலும் வேண்டாமப்பா! இறைவா!
புது வாழ்வு எந்தமக்கு வேண்டுமப்பா
புண்பட்ட வாழ்க்கையோ தேற வேண்டுமப்பா

அளவையூர் கே. எஸ். சிவஞானராஜா


**அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்**

இந்நாட்டவருடனும் வெளிநாட்டவருடனும் இன்றும் இனியென்றும் உங்கள் தொடர்புகட்கு

**மாரியம்மன் மிலேனியம் டெலக்ஸ் தொலைத் தொடர்பு சேவை**

உங்கள் மனம் நிறைந்த கட்டணங்களில் எங்கள் மனம் கனிந்த சேவை

விரைவில்:- ★ மின் அஞ்சல் ★ பக்ஸ்
★ போட்டோ பிரதி சேவைகள்

T. P உள்நாடு:- 070- 213073
070- 212778

வெளிநாடு:- 009470- 213073
009470- 212778

**மாரியம்மன் மிலேனியம் டெலக்ஸ்**
**மாரியம்மன் மோட்டோர்ஸ்**

பருத்தித்துறை வீதி, கோப்பாய்.
(கி/912)



வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

★ சகலவிதமான புத்தக வகைகளுக்கும்
★ 2001 புத்தாண்டு கலண்டர்கள் டயறிகள்
★ புதுவருட, தைப்பொங்கல், பிறந்தநாள் வாழ்த்து மடல்கள்

அனைத்திற்கும் இன்றே நாடுங்கள்

**மக்மிலன் புத்தகசாலை**

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(கி/914)



இனிய புத்தாண்டில் வலம்புரியை வாழ்த்துகின்றோம்

வலம்புரியே!

செய்தியுடன் செவ்வி சிந்தனைக் கருத்துக்களும்
கல்வி அறிவியலுடன் கவிதைகளும் தந்து
மெய்யென வாழும் வித்தக வலம்புரியே
செங்கோலோச்சி நீ சீர் பெற்று வாழியவே

**எங்கள் சேவைகள் உங்களுக்காக**

★ உங்கள் எதிர்காலம் சிறக்க எங்கள்
கிராமிய வங்கியில் சேமியுங்கள்

★ குறைந்த கட்டணத்தில்
போட்டோ பிரதி சேவை

★ உறவினருடன் உறவுப்பாலம் அமைக்க
உள்ளூர் சர்வதேச தொலைத் தொடர்பு சேவை

★ நவநாகரிக முறையில் கவர்ச்சிகரமான ஆடை வடிவமைத்திட
மகளிர் தையல் நிலையம்

★ பெண்களின் உயர்விற்காக
மனையியற் பயிற்சி நிலையம்
(தையல், கேக் ஐசிங், பூவேலை, பன்னவேலை)

கூட்டுறவில் என்றும் உங்களுடன் இணைந்து அகவை ஒன்றில் வலம்புரியை வாழ்த்தும்

**சுன்னாகம்**
**பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**

தொலைபேசி: மின்சார நிலைய வீதி,
உள்ளூர்: 070 - 212632 சுன்னாகம்.
வெளியூர்: 0094 - 070 - 212632
(கி/1177)



நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
**விசேட சலுகை**



பல் கட்டுதல், பற்களுக்கு கிளிப் பொருத்துதல் மற்றும் கண்ணாடி வழங்குதல் ஆகியவற்றுக்கே விசேட சலுகை அடிப்படையில் செய்யப்படுகிறது.

இச்சலுகையைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்!

**எரிக்கனேஸ்**

566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T. P. No:- 2486

91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

⁜ சீனமுறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவரால் சிறந்த தரமான சங்குப்பற்கள் அழகிய முறையில் கட்டிக்கொடுக்கப்படும்.
⁜ சிறப்பான முறையில் மிதப்புப் பற்களுக்கு கிளிப் செய்து கொடுக்கப்படும்
⁜ கண் பரிசோதித்தும் கண்ணாடி வழங்கப்படும்.
(கி/1303)

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## இன்று ஒரு தகவல்

# மக்குமாணவன்மதிமந்திரி!

இங்கிலாந்து தேசத்திலே ஒரு தனவந்தர் வசித்து வந்தார். அவர் பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர். பரம்பரையான பணக்காரர். செல்வாக்கு மிக்கவர். அவருக்கு அரசியலிலும் ஈடுபாடு இருந்தது அவர் இங்கிலாந்து தேசத்தின் நிதி மந்திரியாக விளங்கினார். மந்திரி பதவிகளுள் இது ஒரு முக்கியமான பதவி.

அவருக்கு ஒருஆசை இருந்து வந்தது. தன் மகனும் தன்னைப் போன்றே செல்வாக்குடன் வாழ வேண்டும் என்று விரும்பினார். தான் எப்படி நிதி மந்திரியாக இருக்கின்றாரோ, அப்படியே தன்னுடைய மகனும் இங்கிலாந்து தேசத்தின் நிதிமந்திரியாகத் திகழ வேண்டும் என்றுஆசைப்பட்டார். அவருடைய ஆசை இப்படியாக இருக்க மகனோ சரியான மக்குப் பையனாக இருந்தான். அவனுக்கு படிப்பிலே சிறிதும் அக்கறை இருக்கவில்லை. அவனுடைய மூளையில் பள்ளிப் படிப்பு ஏறவேயில்லை. ஒரே வகுப்பில் அவன் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து படித்தான். நான்காவது வருடம் தான் வகுப்பேற்றப்பட்டான். எல்லாப் பாடங்களிலும் கணக்குப் பாடமே அவனுடைய மூளையில் ஏறவில்லை. கணக்கை வேப்பங்காயாக வெறுத்தான் இப்படியான ம[illegible] எப்படி நிதி மந்திரியா[illegible] டியும்? என் மகன் ஒன்றுககும் உதவாத பிள்ளை என்று தந்தை துக்கப்பட்டார்.

அவனோ மகாமுரடன், சக மாணவர்களுடனும் முரட்டுத் தனமாக நடந்தான். அத்துடன் அகம்பாவியும், ஏழை மாணவர்களைக் காலால் உதைத்துத் துன்புறுத்துவதிலே ஒரு திருப்தி. ஆசிரியர்களையும் அதிகம் மதிப்பதில்லை. படிப்பிலே கவனமில்லாத அவனை ஆசிரியர்களும் வெறுத்தனர், ஏசினர்.

அவனுக்குத் தான் ஒரு போர் வீரனாக ஆக வேண்டும் என்கின்ற ஆசை இருந்தது அதனை வற்புறுத்தியும் வந்தான். தந்தை அதனை விரும்பவில்லை. தனது விருப்பத்தை மீண்டும், மீண்டும் வற்புறுத்தி வந்தான். பாட புத்தகங்களை வீசி எறிந்து விட்டுப் பாடசாலைக்குப் போவதை நிறுத்தினான் ஈற்றில் மகனின் பிடிவாதத்திற்கு தந்தைவிட்டுக் கொடுத்தார் அவன் போர் வீரனாகச் சேர்ந்தான். போர் வீரனான சில நாட்களிலே தந்தை இறந்து போனார்

அவனுடைய தாய் நல்லவள், நம்பிக்கை இழக்கவில்லை. கணவனைப்போல் மகனும் கீர்த்தியுடன் வாழ்வான் என்று நினைத்தாள். கணவன் நிதிமந்திரியாகக் கடமையாற்றியபோது அணிந்த விசேட உடையை மகனும் அணிவான் என்று நம்பி அதனைப்பத்திரமாக எடுத்து வைத்தாள்.

போர் வீரனான அவன் தைரியம் மிக்கவனாய், கொடிய போர்கள் நடைபெற்ற போர் முனைகளிலே நேரடியாக ஈடுபட்டு அனுபவம் பெற்றான். பள்ளியில் அதிகம் படிக்காதஅவன் அனுபவப் பள்ளியில் நிறையக் கற்றுக்கொண்டான்.

பிற்காலத்தில் அவன் தன் தாயின் நம்பிக்கையைப் பூர்த்தி செய்தான். தந்தையின் எண்ணம் நிறைவேறிற்று இங்கிலாந்து தேசத்தின் நிதி மந்திரியானான். தாய் அவனின் தந்தை அணிந்த விசேட உடையை கொடுத்தாள். அவனும் அதை அணிந்தான். தாயின் உள்ளம்மகிழ்ச்சியால் நிறைந்தது. பிற்காலத்தில் அவன் இங்கிலாந்து தேசத்தின்பிரதமமந்திரியுமானான்

இங்கிலாந்து தேசத்தின் பிரதம மந்திரிகளுள் மிகவும் கீர்த்தி பெற்று விளங்கியவர் வின்ஸ்டன் சேர்ச்சிலாவார். இரண்டு உலக மகா யுத்தங்களில் இங்கிலாந்து மக்களின் வீரப் போராட்டத்திற்கு உறுதுணையாக இருந்தவர். அவருடைய பேச்சுக்கள் தேசபக்தியையும் வீரக்கனலையும் ஒருங்கே மூட்டும். அவர் ஓர் அரசியல் மேதை சிறந்த இராசதந்திரி ஒப்பற்ற பேச்சாளர். சிறந்த எழுத்தாளருமாவார். இலக்கியத்திற்கான நோபல் பரிசினையும் பெற்றிருக்கிறார் இலக்கியத்தில் முழு நேரமும் ஈடுபடாமல், அரசியல் வாதியாகவேயிருந்துஅப்பரிசினைப் பெற்ற ஒரே அரசியல் வாதி இவரே. இந்தப்பழுத்த அரசியல் வாதி இளமைப்பருவத்தில் படிப்பையே விரும்பாத முரடராக விளங்கினார்.

நன்றி
**இளமைப்பருவத்திலே**

### பாராளுமன்றத்தை உடன் கூட்டுக

# ஐ. தே. கட்சியின் உப-தலைவர் சபாநாயகருக்கு அவசர கடிதம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் உதவித் தலைவர் காமினி அத்துக்கோரள நாடாளுமன்றத்தை உடன் கூட்டுமாறு சபாநாயகர் அநுர பண்டாரநாயக்காவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அக் கடிதத்தில் நாட்டின் தற்போதையநிலைமை தொடர்பாக ஆராய்வதற்கும், விவாதிப்பதற்கும் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டவேண்டுமென்றும், சில தினங்களுக்கு முன்னர் பாரிஸில் நடைபெற்ற உதவி வழங்கும் கூட்டத்தில் நடந்தவற்றை நாட்டு மக்களுக்கு உரிய நிலைமையை வெளிப்படுத்த வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் இனப்பிரச்சினைக்குத்தீர்வுகாணும் நோக்கில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க ஒருதலைப் பட்சமான போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளனர். இது தொடர்பாக அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றது என்பது பற்றியும் விளக்க வேண்டுமென்றும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-5)

## 18 பேருக்கு நியமனம்

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி ஊக்குவிப்பாளர் 18 பேருக்கு யாழ். செயலகத்தில் அண்மையில் நியமனம் வழங்கப்பட்டது.

யாழ் பிரதேச செயலர் பா செந்தில்நந்தனன், ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ் மாநகர சபை உறுப்பினர்கள் மா.கனகரத்தினம், மோசேஸ், எட்வேட், றீகன் ஆகியோர் முன்னிலையில் மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்டன (க)

## புதுவருட சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

புதுவருடத்தை ஒட்டி, புற்றளை விநாயகர் ஆலயத்தில் இன்று விசேட பூஜைகள் மற்றும் சொற்பொழிவு என்பன இடம்பெறவுள்ளன.

இந்தவரிசையில், 'மாணிக்க வாசகரும்' பக்திநெறியும் எனும் விடயம் பற்றி பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ருபானந்தா பி.ப 5 00மணியளவில் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (உ)

## வெள்ளத்திற்கு பலியானார்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவடிவேப்பு வாசியொருவர் வந்தாறுமூலை உப்போடையில் வெள்ளத்தில் மூழ்கி மரணமானார்.

ஆறு பிள்ளைகளின் தந்தையான சித்தாண்டி பேரிலாவெளியைச் சேர்ந்த 35 வயதான முத்துலிங்கம் யோகராசா என்ற இவர் வயலுக்குச் சென்று வீடு திரும்பும்போது இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. (-க108)

## அமைதிவேண்டி மஹாயாகம்

(அரியாலை)

நாட்டில் சமாதானமும், அமைதியும், சுபீட்சமும் வேண்டி இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் சத்திரம் ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானத்தில் புத்தாண்டு மஹாயாக விஷேட அபிஷேக திவ்விய ஹோமம் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 7 மணிக்கு கணபதி ஹோமம்' லக்ஷ்மி ஹோமம், நவக்கிரக ஹோமம். ஸ்கந்தஹோமம், துர்க்கா ஹோமம் ஆகியன இடம்பெற்று விஷேட அஷ்டோத்திரகலச சங்காபிஷேகத்துடன் விஷேட பூசையும் நடைபெறும். (ந-106)

## ஒன்றுகூடல்

(மண்டைதீவு)

வேலணை பிரதேசசபையின் மிலேனியம் வருடத்தின் ஒன்று கூடலும்பிரியாவிடை வைபவமும் கடந்த வியாழனன்று மேற்படி பிரதேச சபை அலுவலகத்தில் இடம் பெற்றது.

வேலணை பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தி இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (உ-11)

## கடற்படைத் தளபதி சிசில் ஓய்வு பெறுகிறார்

(கொழும்பு)

கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல்சிசில் திசேராநேற்று தனது பதவியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். இவர் ஓய்வு பெறும் போது 'அட்மிரல்' பதவி உயர்த்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது இடத்துக்கு புதிய கடற்படைத் தளபதியாக ரியல் அட்மிரல் சந்தகிரி இன்று பதவி ஏற்கவுள்ளார். ரியல் அட்மிரலாகஇருக்கும் சந்தகிரி வைஸ் அட்மிரலாக பதவி உயர்வுடன் புதிய கடற்படைத் தளபதியாக பதவி ஏற்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ரியல் அட்மிரல் ஏ எச்.எம் ர[illegible]சிக் கடற்படையின் பிரதம கட்டளை இடும் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

## அடையாள அட்டைகளை அபகரித்த குழுவினர்

### வாழைச்சேனையில சம்பவம்

(ஏறவூர்)

வாழைச்சேனை நகருக்குள் திடீரென ஊடுருவிய இனந்தெரியாத குழுவினர் பொதுமக்கள் சிலரது தேசிய அடையாள அட்டைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பாக இதுவரை பதினேழு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவாழைச்சேனைப் பொலிஸ் பொறுப்பதிகாரி எச். எம். பியசேன தெரிவித்தார்

சிவிலுடையில் வந்த சிலர் வீதிகளில் நின்ற வாலிபர்களினதும் மற்றும் குறிப்பிட்ட பிரதேசத்தில் வீடுகளில் இருந்தோரதும் அடையாள அட்டைகளை பலாத்காரமாகப் பறித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-108)

## பாதுகாப்பு ஊழியருடன் தகராறு செய்த பெண்

### யாழ். வைத்தியசாலையில் சம்பவம

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்தியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தருடன் அண்மையில் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட இளம் பெண் மன நோயாளி என தெரியவந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை நண்பகல் வேளை மேற்படி பெண்மணி வைத்தியசாலையில் தங்கியிருந்த உறவினர் ஒருவருக்கு உணவு கொண்டு சென்ற கைப்பையை போதனாவைத்தியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் பார்வையிட முயன்றார்.

அதற்கு அப்பெண்மணி மறுப்பு தெரிவித்ததுடன் பாதுகாப்பு உத்தியோகத்தருடன் கடும் வாக்குவாதத்திலும் ஈடுபட்டார்.

இதனையடுத்து இப்பெண்ணை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்பொலிஸில்ஒப்படைத்தபோது இடம்பெற்ற விசாரணைகளின்றும் சம்பந்தப்பட்டவர் மன நோயாளி என்பது வெளிப்படையாகியது. (உ-12

## பாதிக்கப்பட்ட சாவ. வர்த்தகர்களுக்கு இலகு கடன் வசதிகள்

அண்மைக்கால யுத்த நடவடிக்கை காரணமாக சாவகச்சேரிப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு இலகுக்கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றப் பிரதிநிதிகள், கடந்த சனிக்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்து, இடம் பெயர்ந்த சாவகச்சேரி வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண உதவுமாறு கோரியிருந்ததற்கிணங்க இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

'பாதிக்கப்பட்ட சாவகச்சேரிவர்த்தகர்களது தொழில் முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு உதவியாக வடபகுதி புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையின் நிதியிலிருந்து நிதி வழங்குவதற்கும் அமைச்சர் இச்சந்திப்பின்போது இணக்கம் தெரிவித்துள்ளார். (உ)

## தீயணைப்பு சேவை மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் தீயணைப்புச்சேவை இயங்க ஆரம்பித்துள்ளதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் வே.பெ .பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

கனேடிய அரசின் உதவியுடன் புனரமைக்கப்பட்டுள்ள இச்சேவை தேவைப்படின் 3556 என்ற இலக்கத் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந)

## உலக சாதனையில் முரளிக்கு இரண்டாம் இடம்

(கொழும்பு)

இலங்கையின் சுழல் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் ரெஸ்ட்போட்டிகளில் திறமையாக விளையாடி அதிக விக்கெற்றுக்களை வீழ்த்தியவர் என்ற உலக சாதனையில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

நேற்று முன்தினம்தென்னாபிரிக்க அணிக்கு எதிராக டேபனில் நடைபெற்ற ரெஸ்ட் போட்டியில், அணித் தலைவர் சோல்பொலக்கை வீழ்த்தி இச்சாதனையை முரளிதரன் ஏற்படுத்தினார்

55 ரெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டு, 300 விக்கெற்றுக்களை வீழ்த்தி, உலக சாதனையில் முதலாவது இடத்தை வகிப்பவர் அவுஸ்ரேலிய வேகப்பந்து வீச்சாளர் டெனிஸ் ஸ்ரேல்ஸ் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை முரளிதரன் 58 ரெஸ்ட் போட்டிகளிலேயே 300 விக்கெற்றுக்களை நேற்றுமுன்தினம் வீழ்த்தி உலகில் இரண்டாவது சாதனையை படைத்துள்ளார் எனினும் இலங்கையில் முதலாவது வீரராக இவர் திகழ்கின்றார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும் (இ-4)

### வீடு சேதமுற்றோர்க்கான கொடுப்பனவு

# முழுமையாக வழங்கப்படவில்லை திருத்த வேலைகள் இடை நடுவில்

### உரும்பிராய், சுன்னாகம் பகுதி மக்கள் விசனம்

(மல்லாகம்)

உரும்பிராய், சுன்னாகம் பகுதிகளில் நிரந்தரமாக வசிக்கும் வீடு சேதமுற்றவர்களுக்கு வழங்கப்படும் நட்டஈட்டுத்தொகைபெரும்பாலானவர்களுக்கு முழுமையாக வழங்கப்படாமை குறித்து சம்பந்தப்பட்ட மக்கள் பெரிதும் மனக்குறை வெளியிட்டுள்ளனர்.

போர் அனர்த்தங்களினால் வீடுகள் சேதமுற்றவர்களுக்கு அவற்றை திருத்தியமைப்பதற்கென, 25 ஆயிரம் ரூபா கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருவதே நடைமுறையாகும்.

இவ்வாறு வழங்கப்படும் தொகை முழுமையாக வழங்கப்படாமல் ஒரு பகுதி மாத்திரம் வழங்கப்பட்டதனால் இப் பணத்தை நம்பி வீடு திருத்தம்செய்தவர்கள் இடை நடுவில் திருத்தப் பணிகளை கைவிட்டு காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் மீதிப்பணம் கிடைக்குமா என்பதிலும் பொதுமக்கள் மிகவும் ஐயுறவு கொண்டுள்ளனர். (உ-ப-14)

### பிறக்கும் புத்தாண்டில்

# யுத்த அவலம் ஓய்ந்து சமாதான ஒளி பரவட்டும்

### ரெலோ அமைப்பு புத்தாண்டுச் செய்தி

(யாழ்ப்பாணம்)

பிறக்கும் புதுவருடம் சண்டை ஓய்ந்து சகஜ நிலை தோன்றி அழிவின் அந்தகாரம் அகன்று அனைவருக்கும் நன்மை பயக்கும் ஆண்டாக மலர்ந்து சமாதான ஒளி மிளிர அனைவரும் பிரார்த்திப்போம்.

தமிழ் ஈழ விடுதலை இயக்க யாழ். மாவட்ட அமைப்பாளர் என்கே விந்தன் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்திக்குறிப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும்,

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் போர் முடிவுக்கு வரவேண்டும். பிறக்கும் புதுவருடங்களில் நல்லது நடக்கவேண்டும் என தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

தற்போது கிடைத்துள்ள நல்ல வாய்ப்பைப் பயன்படுத்தி உடனடியாக அரசும் யுத்தத்தை நிறுத்தி நோர்வே நாட்டின் மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சை ஆரம்பித்து இனப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும்.

இதுவே தமிழ் பேசும் மக்களுக்கு நல்ல புத்தாண்டுச் செய்தியாக அமையும். (உ)

# இந்திய - பாக். எல்லைக்கோடு சர்வதேச முக்கியம் பெற்றதல்ல

### உள்துறை அமைச்சர் தெரிவிப்பு

(சென்னை)

பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையிலுள்ள எல்லைக்கோடு ஒருபோதும் சர்வதேச எல்லைக் கோடாக இருக்காது என்றார் உள்துறை அமைச்சர் அத்தவாணி.

கேரள மாநிலத்தில் கூட்டமொன்றில் தொடர்ந்து பேசுகையில்இந்தியாவின் எல்லைப் பாதுகாப்பையும் தேசிய பந்தோபஸ்தையும் அரசுஉத்தரவாதம் தருகிறது என்று அவர்குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்கையில்; பாகிஸ்தானும் ஐ. எஸ். ஏ. அமைப்பும் தீவிர வாதிகளைத் தூண்டிவிடுகின்றன வென்றும் இத்தகைய வன்முறைத் தூண்டுதல்களை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்:

பாகிஸ்தான் நடத்தும் இந்த மறைமுகப்போரினால் இந்தியாபயந்துவிட்டதென்றும் அதனால் ஒருதலையான யுத்த நிறுத்தத்துக்கு வந்ததென்றும் கருதக் கூடாதென்றும் இந்தியாஒருபோதும் சமாதானத்துக்கான முன்னெடுப்புகளை விடமாட்டாதென்றும் அத்வானி தெரிவித்தார்.

இதேவேளை இந்தியாருஒபோதும் முத்தரப்புப் பேச்சுக்கு இடமளிக்கமாட்டாதென்று பாகிஸ்தான் காஷ்மீரில் ஆக்கிரமித்துள்ள பகுதிகளை இன்றும் வைத்திருக்கிற தென்றும் பேச்சினிடையே நினைவுபடுத்தினார் இந்திய உள்துறை அமைச்சர் அத்வானி. (க-து)

# தங்கத்திலான புத்தர்சிலை திருட்டுப் போனது

(கொழும்பு)

விகாரையினுள் புகுந்த ஆயுதக் குழுவொன்று அங்கிருந்த தங்கத்திலான புத்தர் சிலை மற்றும் விலைமதிப்புள்ள புராதன நினைவுச் சின்னங்கள் பணம் ஆகியவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இச்சம்பவம் அண்மையில் ஊறிபொத்தாவிலுள்ள விகாரையொன்றில் இடம் பெற்றுள்ளது (க-இ)

### அஸாமில் ✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻

# தீவிரவாதிகளின் சூட்டுக்கு பெண்கள் உட்பட எட்டுப் பேர் பலி

(சென்னை)

அஸாமில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எட்டுப் பேர் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்

அஸ்ஸாம் கரிபியன் மாவட்டத்தில் ஒரு ஒதுக்குப்புற கிராமத்தில் ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பெண்கள் மூன்று குழந்தைகள் உட்பட எட்டுப்பேரை, வீட்டினுள் புகுந்த தீவிரவாதக் கும்பல் கண்டபடி சுட்டதில் இறந்தனரென்று சொல்லப்படுகிறது

செய்தி கேட்டு உயர் அதிகாரிகள் உட்பட நூற்றுக் கணக்கான காவல் துறையினர் ஸ்தலத்துக்கு விரைந்து தீவிரவிசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (து)

### ஒளி விழா

[யாழ்ப்பாணம்]

திருமறைக் கலாமன்ற இளவாலைக் கிளையும், இளவாலை மறையாசிரியர்கள் குழாமும் இணைந்து நடத்திய ''ஒளி விழா'' நிகழ்வு கடந்த சனியன்று பி.ப.4.00 மணி முதல் இரவு 11.00 மணி வரைஇடம்பெற்றது.

இந்நிகழ்வில், திருமறைக் கலாமன்ற இளவாலைக் கிளையில் இசை பயின்ற இளம் கலைஞர்களின் இசை நிகழ்வும் நடைபெற்றது. (உ-12)

### கள்வர் கைவரிசை

(உடுவில்)

உடுவில் பகுதியில் கள்வர் தம் கைவரிசையை அண்மைய சில நாட்களாக அதிகரித்திருப்பதாக பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர். [உ-ப-14)

### உலகதரிசன அறிவுப் போட்டி இல. 05

#### பரிசில் பெறுவோர் விபரம்

முதலாம் பரிசு

நவரட்ணம் கிருஷ்ணகுமார், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, திருநெல்வேலி.

இரண்டாம் பரிசு

திருமதி ஏ. சர்மிளா, மடத்தடி லேன், மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.

மூன்றாம் பரிசு

வடிவேலு வரதராசா, கோயில் வீதி மல்லாகம்

#### பாராட்டுப் பெறுவோர்

★ நடராசா பிரசாந்தன், குககிரி நீர்வேலி மத்தி, நீர்வேலி:
★ யோ. பிறேமிளா, தெண்டாயுதபாணி கலைநகர் சித்தன்கேணி
★ செல்வி. டேவிற்சாந்தி, பாப்பையா கடையடி, நல்லூர்:
★ உ. ஜெயறோஸ், திருக்குடும்ப ஆ பாடசாலை.
★ சர்வேஸ்வரன் அபிராமி, சிவன் வீதி திருநெல்வேலி.
★ செல்வி ஒலிவியா சாந்தி, 17. கோயில்வீதி யாழ்ப்பாணம்
★ சுதந்திரபாலன் ஜீவதர்சன், றக்கா றோட் யாழ்ப்பாணம்
★ இராமலிங்கம் சுரேஷ், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
★ திருமதி சகுந்தலா குணரத்தினம், ஆர் வீ.ஜி.நல்லூர்
★ கே. அரசேஷ்வரன், கலைமகள் வீதி நல்லூர்
★ செல்வி டி. லக்ஷிகா, சிந்தன்கேணி
★ ஜி உமாகாந், போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்
★ சின்னப்பு சிறீரங்கணேஷன், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி
★ சுதர்சினி சுரேஸ், செட்டித்தெரு நல்லூர் யாழ்ப்பாணம்
★ கிருபானந்தா சின்னத்துரை, கோப்பாய் தெற்கு கோப்பாய்
★ திருமதி வசந்தி ஞானதாஸ், 70, குறோசட் லேன், சுண்டுக்குளி
★ சிவானந்தமூர்த்தி ஜனகன், நீர்வேலி மத்தி நீர்வேலி
★ செ.ஜெ. நிரோஷன், பிரதான வீதி வடுக்கோட்டை,

உலகதரிசன அறிவிப்போட்டியில்கலந்து கொண்டவர்களுக்கும்வாசகர்களுக்கும் நன்றியையும் புதுவருடவாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

குறிப்பாக பல நூறுபேர் கலந்துகொண்ட இப்போட்டியில் அனேகர் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடைகளை எழுதியமையால் குலுக்கல்முறையில் தெரிவினை நடத்தியுள்ளோம் நாளையும் பாராட்டுக்குரியவர்களின் பெயர்கள் வெளிவரும்.

வெற்றிபெற்ற முதல்மூவர்களுக்குமான பரிசில்கள் 6-1-2001 அன்று முற்பகல் 10 மணிக்கு ''வலம்புரி' அலுவலகத்தில்வைத்து வழங்கப்பட இருக்கின்றன.

# விமானத்தை கடத்தியநபர் சரண் காஷ்மீர் முதல்வர் வரவேற்பு

(ஸ்ரீநகர்)

இந்திய பயணிகள் விமானத்தைக் கடத்திய ஹாசிம் குறைசி புதுடில்லி விமான நிலையத்தில் வந்து சரணடைந்ததை காஷ்மீர் முதல்வர் வரவேற்றுள்ளார்.

1971 இல் இந்தியப் பயணிகள் விமானத்தை கடத்தியதற்காக பாகிஸ்தானில் சிறையிலிருந்து பல ஆண்டுகளின் பின வெளிநாடு ஒன்றில் வாழ்ந்துவந்த ஹாசிம் குறைசி இந்தியாவில் சரணடைந்ததை காஷ்மீர் முதல்வர் பாருக் அப்துல்லா வரவேற்பதாக செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஒருதலைப்பட்சமாக இந்தியா யுத்தநிறுத்தத்தை அறிவித்ததும் பாகிஸ்தான் இணங்கி வருகிறதென்றும் இவ்வேளை, குடியரசுத் தலைவர் பாகிஸ்தான் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று செய்தியாளர்கள் கேட்டார்கள்.

இதற்குப் பதிலளித்த காஷ்மீர் முதல்வர் இதுதொடர்பாக குடியரசுத்தலைவர் செல்வதும் பேச்சுக்கள் நடத்துவதும் தவிர்க்கமுடியாத தொன்றாகலாமென்றும் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனவரி இருபத்தாறாம் திகதிக்கு பின் யுத்த நிறுத்தம் மேலும் நீடிக்கப்படுவதுகுறித்தும் தெரிவிக்கப்படுமென்றும் கூறினார். (து

# தமிழர்வாழ்வில்புதுமைகள் பொங்க வாழ்த்துகிறோம்

### 'புளொட்' அமைப்பின் புத்தாண்டு வாழ்த்து

[யாழ்ப்பாணம்]

புத்தாயிரமாண்டின்இரண்டாவது புதிய வருடம் பிறந்துள்ள இந் நாளில் பகைமைகள் நீங்கி, தமிழ் மக்களின் வாழ்வு வளம் பெற எம்மாலியன்ற பணியாற்ற நாம் எல்லோரும் முன்வரவேண்டும்.

இவ்வாறு மாநகர சபை உறுப்பினர்கள் சார்பில் புளொட் அமைப்பினர் அனுப்பியுள்ளபுத்தாண்டுவாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; குரோத மனப்பான்மைகள் மனிதப் படுகொலைகள், பாலியல் வல்லுறவுகள் கொடிய யுத்த அவலங்கள் நீங்கி தமிழ் பேசும் மக்களின் அவல வாழ்வு நீங்க வேண்டும்.

இது விடயத்தில்மதத்தலைவர்கள், அரசியல் தலைவர்கள், மக்கள் நலனில் அக்கறை கொண்டோர், மக்கள் பிரதி நிதிகள் யாவரும் ஒன்றுபட்டு ஓரே கொள்கையில் குரல்கொடுக்க வேண்டுமென விரும்புகின்றோம்.

மேலும், யாழ். மாநகர சபையால் மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு நல்கும்படி வர்த்தக பிரமுகர்களை கோருவதுடன் அனைவருக்கும் எமதுநல்வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்

இவ்வாறு அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [க-உ]

### மீளாய்வு

(மல்லாகம்)

சுன்னாகப் பகுதி மக்களின் பங்கீட்டு அட்டைகள், மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன. [உ-ப-14]

தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்
— குறள் —

வலம்புரி

## சமாதானம் மலரட்டும்!

இரண்டாயிரம் ஆண்டு தன்னால் எதனையும் இந்த மண்ணில் செய்ய முடியவில்லை என்ற சோகத்தில் நேற்றுடன் தனது பதவிக் காலத்தை முடித்துக் கொண்டது. மிலேனியத்தின் பிறப்பை உலக மக்கள் எத்தனையோ ஆரவாரம் செய்து 'வரவேற்றார்கள், அதன் வருகைக்காகச் செலவிட்ட தொகை இலட்சக்கணக்கான மக்களின் வறுமையை, ஏழ்மையை போக்கக்கூடியது. அப்படியிருந்தும் கோடிக் கணக்கான செலவில் மிலேனியத்தின், வருகைக்கு வரவேற்பு நடத்தப்பட்டது.

எனினும் வரவேற்புக்கேற்றவாறு மிலேனியத்தால் இம்மண்ணில் சமாதானத்தை - அமைதியை வழங்க முடியாது போயிற்று, குறிப்பாக இலங்கை வாழ் தமிழ் மக்கள் மிலேனிய ஆண்டில் பெரும் துன்பங்களையும், வேதனைகளையுமே சந்தித்தனர்.

அவ்வாண்டின் இறுதிப் பகுதிகளில் நோர்வேயின் சமாதான முயற்சிகள் - தலைவர் பிரபாகரனுடனான நோர்வேத் தூதுவரின் சந்திப்பு - விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்புகள் எல்லாம் சமாதானத்தின் விடிவெள்ளியாகத் தெரிந்த போதிலும் அரசின் தெளிவற்ற போக்கால் கீழ்த்திசை வெளிக்காமலே இரண்டாயிரம் ஆண்டு மேற்றிசையில் மறைந்தது. இத் துர்ப்பாக்கிய நிலையால் புலருகின்ற புதுவருடத்தை தமிழ்மக்கள் உளச் சோர்வுடன் .. மங்கிப்போன நம்பிக்கையில் வரவேற்கவுள்ளனர்.

யுத்தத்தின் தொடர்ச்சியும், உயிரிழப்புகளின் சோகங்களும் நீண்ட காலத்திற்கு நின்று நிலைக்க முடியாதென்பது உலகு நமக்குத் தந்த பாடமாகும். அவ்வகையில் மலருகின்ற 2001ம் ஆண்டு கடந்து போன ஆண்டுகளைப் போலன்றி இன்னல்படும் இனியதமிழ் இனத்திற்கு விடிவு தருவதாக ... அமைதி தருவதாக மலர வேண்டுமென்பதே பலரினதும் பேரவாவாகும்.

எதிர் பார்க்கப்படும் அமைதி - சமாதானம் நிலவ வேண்டுமாயின் வெளிநாடுகளின் உதவி பெறப்பட வேண்டும்,என்பதும் உண்மையாகும்.

இவையெல்லாம் இந்த ஆண்டில் நிறைவேற நாமெல்லோரும் இதய சுத்தியோடு, சமாதானத்தின் வரவுக்காக இறைவனைப் பிரார்த்திப்போமாக.

# மலர்கின்ற இனிய புத்தாண்டை மகிழ்ச்சியுடன் வரவேற்போம்

## அமைச்சர் டக்ளஸ் புத்தாண்டு வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

இதுவரை காலயுத்தஅவலங்களிலிருந்து விடுபட்டு நிரந்தர அரசியல் அமைதியும்,சமாதானமும் இனிவரும் நாட்களில் எமது மண்ணில் நிலைத்திட மலருகின்ற இனிய புத்தாண்டை மகிழ்ச்சியுடன் வரவேற்போம்

வடபகுதிஅபிவிருத்தி புனர்வாழ்வு,புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள புத்தாண்டு செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது;

எதிர்காலம் எதிர்பார்ப்புக்கள் நிறைந்தவையாக எம் முன்னே விரிந்து கிடக்கின்றது நிகழ்கால நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்றி நிம்மதியான வாழ்விற்கு அடித்தளமிடவருகின்ற புத்தாண்டில் நாம் அனைவரும் உறுதியுடன் கரங்களை இணைத்துக் கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

எமதுமக்களின் சிதைந்து போன வாழ்வை மீட்டெடுக்க வேண்டிய பாரிய கடமை எம் முன்னே விரிந்து கிடக்கிறது. அழிவின் விளிம்பிலிருந்து அல்லற்படும் தேசத்தையும், உடைந்து போயிருக்கும் இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தையும், நொருங்கிப் போயிருக்கும் எமது மக்களின் இனியவாழ்வையும் மீளக் கட்டியெழுப்பவும் உறுதிபூண்டுள்ள நாம் பாரிய பொறுப்புக்களை எமது தோள்களில் சுமந்தவாறேமலர்ந்துள்ளபுத்தாண்டில் காலடி எடுத்து வைத்துள்ளோம்.

இவ்வாறு அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இவ்வுலகில்....

சிலையான தெல்லாம் கல்லாகுது
கவியான தெல்லாம் சொலலாகுது
நனவான தெல்லாம் கனவாகுது
மெய்யான தெல்லாம் பொய்யாகுது

ஜெயந்தி - மீசாலை

## நலந்தருவாயா?

நாதியற்று நடுத் தெருவில் — நாங்கள்
நாயாய் அலைகின்றோம்
அகதியெனும் முத்திரையில் — தினமும்
அவலங்களைச் சுமக்கின்றோம்
முத்தாக முக்கனிகள் — முற்றி
முழித்திட்ட காலத்தில்
புத்தாயிரமும் தந்தது — மனிதப்
தை குழிகளைத் தான்! ! !
நல்லாயிரம் ஆண்டே — நீயாவது
தமிழனுக்கு நலந்தருவாயா?

எம். சுயந்சன் - கோண்டாவில்

## புத்தாண்டே நீ வருவாய்

அமிழ்தமாய் எங்கள் வாழ்வு அவனியில் சிறந்திட
புத்தாண்டே நீ வருவாய்
தமிழனுக்கோர் புது வாழ்வு தந்திட
புத்தாண்டே நீ வருவாய்
நித்தம் நாம் படும் அல்லல்கள் நீங்கிட
புத்தாண்டே நீ வருவாய்
சித்தம் கலங்க வைக்கும் யுத்தம் ஓய்ந்திட
புத்தாண்டே நீ வருவாய்
எங்கும் புது வசந்தம் பூத்துக் குலுங்க
புத்தாண்டே நீ வருவாய்
ஓக்கும் யுத்தம் நிரந்தரமாய் மடிந்துவிட
புத்தாண்டே நீ வருவாய்

தர்மராஜா - அஜந்தகுமார் - யார்வத்தையூர்

## செல்வதும் வருவதும்

| | | | |
|---|---|---|---|
| சென்ற | ஆண்டின் | சிறுமை | நோக்கி |
| அன்று | நடந்த | அழிவை | நோக்கி |
| சீறிய | நெருப்பை | செதுக்கிய | கோரம் |
| ஊறிய | மனத்தில் | ஒழுகிய | காயம் |
| மேலும் | நோக்கி | மிடியும் | பிணியும் |
| காலும் | கையும் | கழிந்தது | நோக்கி |
| தெளிவாய் | உணர்வோம் | தீர்வை | நோக்கி |

த. செல்வகுமார்
(குப்பிழான)

## வாழ்க இதயபூமி

சோதனைகள் மெல்ல நீங்கட்டும்
சொந்த வாழ்க்கை ஒளிவீசட்டும்
சாதனையில் ஈழம் வெல்லட்டும்
சங்கீதத் தென்றல் வீசட்டும்
போர்முனையில் புன்னகை மலரட்டும்
புரிந்துணர்வுப் பூக்கள் சிரிக்கட்டும்
வாள்முனையின் ஆட்சி அடங்கட்டும்
வாழ்கறம் இதயபூமி

கு. றஜீபன்
(ஏழாலை மேற்கு)

## உருவச்சிலை திரைநீக்கம்

(சுண்டுக்குளி)

அச்சுவேலி வைத்தியசாலை ர்ணயிப்புக்கு அடித்தளமிட்ட அமரர் சிற்றம்பலம் ஏபிரகாம் காடினர் அவர்களின் உருவச்சிலை அண்மையில் அச்சுவேலி வைத்தியசாலையில் வைபவரீதியாகத் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது

அச்சுவேலி வைத்தியசாலை அதிகாரி இராசலிங்கம் தலைமையி நடைபெற்ற மேற்படி வைபவத்தில் அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயப் பங்குத்தந்தை அருட்திரு ஜெபநேசரட்ணம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார் (ச-110)

## இடம் பெயர்ந்தோர் கொடுப்பனவு

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்தோருக்கான ஐயாயிரம் ரூபா கொடுப்பனவுக்கு விண்ணப்பித்தவர்களில் ஒரு தொகுதியினர்க்கானகொடுப்பனவு நிதி வந்து சேர்ந்துள்ளது.

இதில்,அராலியைச் சேர்ந்த 42 குடும்பங்களும், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 12 குடும்பங்களும் சுழிபுரத்தைச் சோந்த 110 குடும்பங்களும், சங்கானையைச் சேர்ந்த 21 குடும்பங்களுக்குமாக மொத்தம் 185 குடும்பங்களுக்கான கொடுப்பனவுகளே வந்து சேர்ந்துள்ளன.

இவர்களுக்கான கொடுப்பனவு காசோலைகள் யாவும் உரியவர்களின் வங்கிக்கணக்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-24)

## பல்கலை மாணவனுக்கு கறுப்புப்பட்டி

(சுண்டுக்குளி)

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒருவர் முதன் முறையாக கராத்தேயில் கறுப்புப்பட்டியைப் பெற்றுள்ளார்.

விஞ்ஞான பீட பௌதீகவியல் சிறப்பு 4 ஆம் வருட மாணவனாகிய கந்தையா முரளிதரனே பல்கலைக்கழக கராத்தே பயிற்றுநர் ரஞ்சித் சைலேந்திர குமாரிடமிருந்து கறுப்புப்பட்டியைப் பெற்றுக் கொண்டவராவர்,

கடந்த பல வருடங்களாக யாழ் பல்கலைக்கழகத்தில் கராத்தே பயிற்றுவிக்கப்பட்டு வந்தாலும், மாணவர் ஒருவருக்கு கறுப்புப்பட்டி வழங்கப்படுவது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-110)

## விஞ்ஞானபீட மாணவர்களுக்கான பொதுக் கூட்டம

(யாழ்ப்பாணம்)

விஞ்ஞான பீட மாணவர்கள் அனைவருக்குமான கூட்டம் ஒன்று இன்று முற்பகல் 10 00 மணிக்கு கனகசபாதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகல விஞ்ஞானபீட மாணவர்களையும மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு விஞ்ஞான பீடாதிபதி தெரிவித்துள்ளார். (ச)

## கழிவுநீர் வாய்க்கால் அமைப்பு

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள் செட்டியார்மடம் நலன்புரி நிலையத்தில், கழிவுநீரை வெளியேற்றுவதற்கான வடிகாலொன்று அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிலையத்திலுள்ள கிணற்றின் அதிகரித்த பாவனை காரணமாக வெளியேறும் பெருந்தொகை நீர், இதுவரை காலமும் அருகிலுள்ள பாரிய குழியொன்றில் தேங்கியிருந்தது.

இதுகுறித்து நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்தோர்க்கு, விளக்கிக் கூறி,குழியை மூடுமாறு கோரப்பட்ட போதிலும அது பலனளிக்கவில்லை.

அதனையடுத்து, கிராம சேவையாளர்,மற்றும் பொது சுகாதார பரிசோதகர் சமுர்த்தி உத்தியோகத்தர் அடங்கிய குழுவொன்று சம்பந்தப்பட்ட இடத்திற்கு விரைந்து எடுத்துக்கூறியதன் பேரில்,அங்கு நீர் வெளியேற்றும் வாய்க்கால் ஒன்று அவ் நலன்புரி நிலையத்தில் தங்கியிருப்போர்களால் அமைக்கப்பட்டது. (உ-24)

## மலரும் இனிய புத்தாண்டே! அன்பும் பண்பும் வளர வா!

பிறருக்கும் புத்தாண்டுகளில் நாம் ஏதோ ஒரு நற்செயல் செய்வோம். எனத் தீர்மானம் எடுப்பது வழக்கம் வரும் புத்தாண்டில் 'நாம் எல்லோரும் அன்பை ஒருவருக்கொருவர் பகிர்ந்து மனித நேயத்துடன் பிறர்க்கு உதவும் நல்ல மனப்பான்மையை வளர்ப்போம்' எனத் தீர்மானம் எடுப்போமாக.

நாம் மற்றவர்களுக்கு தக்க தருணத்தில் இன்முகத்துடன் கூடிய புன்சிரிப்புடன் வேண்டிய உதவிகள் செய்வது என்பது ஒரு பெரும் நற்பண்பாகும். கடும் சொற்களைத் தவிர்த்து எல்லோரிடனும் இன்சொல் பேசுவதின்மூலம் நாம் இழப்பதற்கு ஒன்றுமில்லையே!

இக் காலகட்டத்தில் அங்கவீனமுற்றோரும் அனாதரவான நோயாளிகள், முதியோர், வறுமையில் அல்லல்படுபவர்கள் எனப் பற்பல நிலையில்உள்ள மனமுடைந்தவர்கள் அனேகர் உள்ளனர் இவர்களுக்கு நாம் அன்பையும், ஆதரவையும் முடிந்த உதவிகளையும் வழங்குவோமாயின், அவர்கள் மனம்மகிழ்ந்து மிக ஆறுதலடைவர்கள் ஆகவே, இப் புத்தாண்டை நாம் அன்பைப் பரிமாறும் புத்தாண்டாக வரவேற்போமாக.

யோகராணி பொன்னுராசா
(வட்டுக்கோட்டை)

# புலிகள் சமாதானத்தை விரும்பின்

## தமிழ்க்கட்சிகளுடன் இணங்க வேண்டும்

### ஈ. பி. ஆர். எல். எவ். வரதர் அணி அறிக்கை

(கொழும்பு)

சமாதானம் என்பது அரசியல் தீர்வினாலும், ஜனநாயகச் சூழ்நிலை தமிழ் மக்கள் மத்தியில் உருவாக்கப்படுவதனாலுமே ஏற்பட முடியும்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி [வரதர்அணி] நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது. விடுதலைப் புலிகள் உண்மையில் சமாதானத்தை விரும்புபவர்களானால் நடைமுறையில் பின்வரும் விடயங்களை அவர்கள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

★ யாழ்ப்பாணம்-வவுனியா பிரதான வீதியை பொது மக்களின் பாவனைக்கா சுத்திறந்து விடுதல் வேண்டும்.

★ தமிழ் மக்கள் மத்தியில் உள்ள சக்திகளிடையேயும், அனைத்துத் தமிழ் கட்சிகளோடும் ஒரு சமாதான உடன்பாட்டுக்கு புலிகள் முன்வருதல் வேண்டும்.

★ அரசாங்கம், எதிர்க்கட்சி ஆகியவற்றுடன் பேச்சு நடத்த நடைமுறைச் சாத்தியமான மாற்று அரசியல் தீர்வு பெட்டகத்தை உருவாக்க அனைத்து தமிழ் கட்சிகளுடனும் கலந்தாலோசித்து ஓர் உடன்பாட்டை ஏற்படுத்தல் வேண்டும்.

இக் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமே புலிகள் ஆக்கபூர்வமான, சுமுகமானதுமான நிலமைகளை ஏற்படுத்தி பேச்சுக்கான வழிகளைத் திறக்க முடியும்.

இதனை நடைமுறைப்படுத்த சர்வதேச சமூகம், தமிழ்க்கட்சிகள், கல்வியியலாளர்கள், சிங்களஜனநாயக முற்போக்கு சக்திகள் ஆகியன புலிகளை நோக்கி வலியுறுத்தி குரல் எழுப்ப வேண்டும் மென்றும் அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ)

## சிஹலஉறுமய, ஜே. வி. பி. அரசியல் லாபம்தேருகின்றன

### அலவி மௌலானா தெரிவிப்பு

(கொழும்பு)

சிஹலஉறுமய கட்சியும் மக்கள்விடுதலை முன்னணியும் (ஜே.வி.பி) தங்களது சொந்த அரசியல்லாபத்திற்காக நோர்வேயின் சமாதான முயற்சியை குழப்புவதற்கு முயற்சிசெய்து வருகிறார்களென்று தொழில்அமைச்சர் அலவிமௌலானா தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் தற்போது நடைபெற்று வரும் யுத்தத்தினால்ஏற்படும் உயிர் இழப்புக்களைகருத்தில் கொண்டு ஜே வி பியும்சிஹல உறுமயக்கட்சியும் அவர்களது இனவாதப்போக்கை கைவிட்டுமக்களுடைய மேம்பாட்டுக்காக உழைக்கமுன்வர வேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார். (வ)

## சிற்றி ஒவ் றிங்கோ சேவை பொங்கலுக்குப் பின்பே!

(திருமலை)

திருமலைக்கும், யாழ்ப்பாணத்துக்குமான பயணிகள் கப்பல்சேவை எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தை அடுத்தே நடத்தப்பட விருப்பதாகதெரிவிக்கப்படுகிறது

பயணிகள் கப்பல் சேவையில் ஈடுபட்டிருந்த ''சிற்றி ஒவ் றிங்கோ'' கப்பலின் திருத்தவேலைகள் இன்னமும் முடிவடையவில்லையென துறைமுக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை ''லங்கா முடித்த'' கப்பல் அடுத்த வாரமளவில் ஒரு தடவை பயணிகள் கப்பல்சேவையில் ஈடுபடலாம் என்று திருமலை துறைமுகவட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## விடுதலைப் புலிகளை பிரிட்டன் தடை செய்யாது!

(இலண்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகளை பிரிட்டிஷ் அரசு ஒருபோதும் தடை செய்யப்போவதில்லை என பிரிட்டிஷ் இராஜ தந்திர வட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்ததன் மூலம் விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச ரீதியில் மதிப்பு ஏற்பட்டுள்ள தெனவும். இந்நிலையில் புலிகளைத் தடை செய்ய வேண்டிய தேவைப்பாடு பிரிட்டிஷ் அரசிற்கு இல்லை எனவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ந)


மலரும் புது வருடத்தில் எமது தொலைபேசி பாவனையாளர்கள் நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் இனிய புதுவருட வாழ்த்துக்கள்

எந்த நெருக்கடி நேரத்திலும் கூட உங்களுக்கு உடனடியாக வெளிநாட்டு தொலைத் தொடர்புகளை ஏற்படுத்தித் தருபவர்கள்.

G.S.B. தொலைத்தொடர்பு நிலையம்

444/2, நாவலர் வீதி, (பாப்பையா கடைச் சந்தி) யாழ்ப்பாணம்.

குறைந்த கட்டணம் நிறைந்த சேவை

தொலைபேசி 021- 3220, 021- 3430

தொலைநகல் (FAX) 021- 3430

(கி/917)


## பாடசாலைகள் நாளை ஆரம்பம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான புதுவருடத்தின் 1ம் தவணை நாளை 2ந் திகதி ஆரம்பமாகவிருப்பதுடன், க. பொ. த. சாதாரண பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பிடப்படும் 94 பாடசாலைகள் 15ஆம்திகதிக்கு பின்னரே ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள் பட்டுள்ளது. (ந4.

### தளங்கிளப்பு

யாழ்ப்பாணப் பட்டினத்தின் பாதுகாப்பு பேலும் வலுப் பெற்றுள்ளதாகவும் அவர் மேலும்தெரிவித்துள்ளார்.

இதேவேளைவிடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தம்செய்துள்ள நிலையில் இவ்இராணுவநடவடிக்கை இடம் பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (இ)

### சிப்பாய்..

இச்சம்பவம் குறித்துதுணைவேந்தர் பேராசிரியர் பொ: பாலசுந்தரம்பிள்ளை உரியவர்களுடன் தொடர்பு கொண்டதாகத் தெரியவருகிறது

இதேவேளை குறித்த மாணவன் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-12-37)

### நோர்வே--

அடிப்படையில் தான் விசேட தூதுவர் இருதரப்பினருடனும் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சோல் ஹெய்ம் புதிய தீர்வுத்திட்டம் ஒன்றின் அடிப்படையில் புலிகளின் தலைவர் பிரபாகரனையும் அரசுத் தலைவி சந்திரிகாவையும் தனித்தனியாக சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

#### தைப்பொங்கள் தினத்தை அண்டிய பேச்சு

நோர்வேயின் விசேட பிரதிநிதிகளின் சந்திப்பும், பேச்சு வார்த்தையும் பெரும்பாலும், எதிர்வரும் தைப் பொங்கல் தினத்தை அண்டியதாக இடம்பெறலாம் எனவும் இப்பேச்சுவார்த்தைக்கு இடையூறு விளைவிக்காவண்ணம் நல்லெண்ண சமிக்ஞையாக யுத்த நிறுத்த மொன்றைக் கால அவகாசம் குறிப்பிட்டு ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பார் எனவும், தெரியவருகிறது.

இதற்கேற்ற வகையில் நாளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தை நடத்திய பின்னர், நாளை மறுதினம் மந்திரிசபையில் இது சம்பந்தமாக ஆராய்ந்து பொருத்தமான முடிவொன்றை ஜனாதிபதி எடுப்பார் என்றும் மேற்குலக இராஜதந்திர வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. (வ)

## மட்டு நகரில் கடமையாற்ற 16 டாக்டர்கள் சம்மதம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமை ஆற்றுவதற்கு சம்மதம் தெரிவித்து 16 சிங்கள டாக்டர்கள் மீண்டும் நாளை கடமைக்கு சமுகம் கொடுக்கவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை சுகாதார அமைச்சின் நிர்வாகப்பிரிவு மேற்கொண்டுள்ளதாக பிரதிப் பணிப்பாளர் வெலிகத்வத்த தெரிவித்துள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் 6ம் திகதி மட்டக்களப்பு பிள்ளையாரடியில் இடம் பெற்ற கண்டித் தாக்குதல் சம்பவத்தினை அடுத்து 37 சிங்கள டாக்டர்கள் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் இருந்து வெளியேறியிருந்தனர். இவர்களில் 16 பேர் மீண்டும் மட்டக்களப்புக்கு வர சம்மதம் தெரிவித்துள்ளனர். (வ)

## இல.செல்லவேண்டாம் உல்லாசப் பயணிகளுக்கு ஜேர்மன் எச்சரிக்கை

(கொழும்பு)

காலிப்பகுதியிலுள்ள விடுதியில் ஜேர்மன் பிரஜை ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டும். ஜேர்மன் இளம் பெண் பாலியல் வல்லுறவுக்கு ஆளான சம்பவத்தையும் அடுத்து இலங்கைக்கு உல்லாசப்பயணம் மேற்கொள்ள வேண்டாமென்று ஜேர்மன் அரசு தமது நாட்டுமக்களுக்கு அறிவித்துள்ளது.

ஜேர்மன் அரசின் இத்தகைய எச்சரிக்கை அறிவிப்பானது இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கையை குறைக்குமெனவும் இதனால்பெறப்படும்வருமானம் வீழ்ச்சியடையலாமெனவும் சுற்றுலாத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## புலிகளின் முகவர் நாடுகடத்தப்பட்டார்

(கொழும்பு)

தமிழிழவிடுதலைப் புலிகளின்முகவர் எனக்கருதப்படும் கிறிஸ்ரிறெஜீனோட் லோறன்ஸ் தாய்லாந்தில் இருந்துநோர்வேக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

நீர்முழ்கிக்கப்பலைத் தயாரிக்கும் வேலையில்ஈடுபட்டிருந்தார் என்றகுற்றச் சாட்டின் பேரிலேயே தாய்லாந்து நிதிமன்றம் இவரை அவர் வசித்துவந்த நோர்வேக்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. (ந)

## மேலும் 6 பேர் ஆஜர்

(மந்திகை)

மிருசுவில் படுகொலைச்சம்பவத்தின் முக்கிய சூத்திரதாரிகள் எனச் சந்தேகிக்கப்படும் மேலும் ஆறு இராணுவத்தினரை, நேற்று பொலிஸார் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அன்னலிங்கம் பிறேம் சங்கர் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

நேற்று ஆஜர்படுத்தப்பட்ட இராணுவத்தினரின் விபரம் வருமாறு

★ கோப்ரல் கே. முனசிங்க (அம்பாந்தோட்டை)

★ எஸ் ஏ எல் புஸ்பசமன் குமார (விபுல்தெனிய)

★ பி. அபேய விக்கிரம [மாதிபெல)

★ கே. தோம்சிலங்க (பேருவளை)

★ எச். எம். எஸ். றோசன செனத் மியனகும்பவ (செனகபுர)

★ ஏ. லக்மன் குமார [கம்பகா]

மேற்படி சந்தேக நபர்களை எதிர்வரும் 10ந் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்

இதேவேளை இப்படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்களை இனம் காண நாளை மறுதினம் இடம் பெறும் அடையாள அணிவகுப்பில் இவர்கள் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்களெனவும், இவர்களுக்கு பிறிதோர் திகதி அறிவிக்கப்படுமெனவும் நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க நேற்று முன்தினமும் இச்சம்பவம் தொடர்பாக ஆறு சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. [இ-23]

## விரிவுரையாளர் மரணம்

(மந்துவில்)

மண்ணெண்ணை விளக்குக்கு அருகிலிருந்த பெற்றோல் குப்பி தீப்பற்றிக் கொண்டதனால், எரிகாயங்களுக்கு உள்ளாகி, மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் பொன்னையா கமலரூபன் நேற்று அதிகாலை மரணமானார்.

கடந்த 25ந் திகதி இத்தி அனர்த்தத்தால் காயமடைந்த இவர் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். [ந-23,42]

## 125 ஆவது ஆண்டு நிறைவு விழா

[சுண்டுக்குளி]

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் ஆரம்ப நிகழ்வு இன்று காலை 10 00 மணிக்கு நடைபெறவுள்ளது

பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் இவ் விழாவின் முதல் நாளாகிய இன்று பாடசாலை ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் 125 ஆவது ஆண்டினை நினைவு கூரும் வகையில் அழகுற அச்சிடப்பட்ட ஆவணக்கோப்புFILEஅட்டை வெளியீடும், பாடசாலை உபகரணங்கள் விற்பனை நிலையத்திறப்பு விழாவும் நடைபெறும். [ச-110]

## கல்வி அதிகாரிகள் விஜயம்

(சுண்டுக்குளி)

மாணவர்களின் கற்றல், ஆசியர்களின் கற்பித்தல் செயற்பாடுகளைப் புதியகல்வி ஆண்டில் சிறப்பாய் முன்னெடுப்பதற்கான வழிவகைகளையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்காக கல்வித் திணைக்கள அதிகாரிகள் பாடசாலைகளுக்கு இன்று விஜயம் செய்யவுள்ளனர். [ச-110]

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தினரால் இல : 15 வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.